கிறிஸ்தவனும் சமூக வாழ்க்கையும்

by

Rev. G. GEORGE, B. A., L. T.,
Headmaster,
Bishop Sargent Training School, Palayamkottai.

திருநெல்வேலி டயோசீசன் பிரஸ்,
பாளையங்கோட்டை.
1960

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பொருளடக்கம்

முகவுரை		iv
முதலாம் அத்தியாயம்	மனிதனும் சமூகமும்	1
இரண்டாம் அத்தியாயம்	குடிமைப் பண்பு	
மூன்றும் அத்தியாயம்	சமூகமும் அரசியலும்	12
நாலாம் அத்தியாயம்	குடியாட்சியும் கிறிஸ்தவனும்	21
ஐந்தாம் அத்தியாயம்	கல்வி	24
ஆறும் அத்தியாயம்	சட்டமும் கட்டுப்பாடும்	27
ஏழாம் அத்தியாயம்	சுகவாழ்வு	32
எட்டாம் அத்தியாயம்	நீதி	35
ஒன்பதாம் அத்தியாயம்	பொருளாதாரம்	40
பத்தாம் அத்தியாயம்	இன்ப வாழ்க்கை	46
பதினொரும் அத்தியாயம்	சமூக சேவை	
பன்னிரண்டாம் அத்தியாயம்	முடிவு	
முடிவுரை		

முகவுரை

சமூகத்தில் உள்ள குறைபாடுகளையும் பெரும் பாலான மக்களின் சமூக உணர்ச்சியின்மையையும் வெகுநாளாய் கவனித்து அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். என்னால் ஆவன செய்தும் வந்தேன். இப்புத்தகத்தை எழுத வேண்டும் என்று கேட்கப்பட்டபோது அதுவும் கடவுளால் கொடுக்கப் பட்ட ஒரு பணி என்று எண்ணி முழு மனதோடு ஏற்றுக்கொண்டேன். வேலை நெருக்கடியாலும், குறுகிய கால அளவில் எழுதி முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபடியாலும் அதிக விரிவாக எழுத முடியவில்லை. என்றாலும் முக்கிய கருத்துக்களை வெளியிட்டுள்ளேன். இப்புத்தகம் முற்றுப் பெற்ற அறிவுக் களஞ்சியம் அல்ல; ஒரு சிந்தனைக் கிளறிதான். இதை வாசிப்பவர்கள் சொல்லப்பட்ட குறிப்புகளின் மேல் தங்கள் சிந்தனையைச் செலுத்தி மேலும் ஆராயவேண்டும். ஆராய்ச்சிக் கூட்டங் களுக்கு வேண்டிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன. வேத வசனங்கள் குறிப்பிடப்படவில்லை. முக்கிய மானவை மட்டுமே காட்டப்பட்டுள்ளன. இன்னும் போதுமான வசனங்களை கருத்துக்களுக்கு இசைய தேடிக் கண்டு கொள்ளலாம்.

எனக்கு இவ்வாய்ப்பைத் தந்த கடவுளுக்கும் தமிழ் நாடு கிறிஸ்தவ இலக்கிய குழுவினருக்கும் என் நன்றி. சற்று உதவி செய்த திரு. டி. எஸ். பி. வில்லியம் அவர்கட்கும் நன்றி.

அத்தியாயம் 1

மனிதனும் சமூகமும்

மனிதன் ஒரு அதிசயப்பிறவி. அவனுடைய உடல் விஞ்ஞான அறிவுப்படி விசித்திரமாகவும் சிக்கலாகவும் அமைந்துள்ளது. பல்வகைப்பட்ட அலுவல்கள் உடலின் பல பாகங்களால் ஒன்றுக்கொன்று இசைய நடத்தப்பட்டு அவன் நகரவும் செயல் புரியவும் சிந்திக்கவும் அவனுக்கு உதவி செய்கின்றன. ஆனால் இந்த பல அலுவல்களையும் அவற்றை நடத்தும் உறுப்புக்களையும் ஆண்டு நடத்துவது அவனுடைய நரம்பு மண்டலமே. நரம்பு மண்டலத்தின் முக்கிய பாகம் மூளை. மூளையில் சிந்தனை, ஞாபகம், தீர்மானம் முதலிய செயல்களுக்கு வெவ்வேறு மையதானங்கள் உண்டு. இவையெல்லாம் இச்சை செயல்களாகும். மனிதனின் யோசனை, தீர்மானம் இன்றியே நடைபெறும் அனிச்சை செயல்களும் உண்டு. அவற்றிற்கும் மூளையின் ஒரு பகுதியாகிய முகுளமே பொறுப்பு இந்த அனிச்சை செயல்களை இயற்றுவிப்பது மனிதனுக்கு இயற்கையில் அமைந்துள்ள 14 இயல்புகளே (Instincts). அவையாவன: மகவூக்கம், போரூக்கம், ஆராய்வூக்கம், அருவருப்பூக்கம், ஒதுங்கூக்கம், கூட்டூக்கம், முதன்மையூக்கம், பணிவூக்கம், காதலூக்கம், திரட்டூக்கம், கட்டூக்கம், முறையீடூக்கம, நகையூக்கம், உணவூக்கம்.

இந்த இயல்புகளின்படி மனிதனும் மற்ற உயிர்ப் பொருட்களும் இயல்பாக தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றன. ஆகவே மனிதனின் செயல்களில் மிகுதியானவை இந்த இயல்புகளால் தூண்டப்படுபவை ஒவ்வொருவனும இந்த இயல்புகளின் ஏவுதலை நிறைவேற்ற முயலுகிறான். பழங் காலத்தில் அதாவது நாகரீகம் அற்ற காலத்தில் மனிதன் அநேகமாய் மற்றப் பிராணிகளைப் போலவே நடந்து கொண்டான். தற்போது சிறு குழந்தையை நாம் அந்த மட்டத்தில் வைக்கலாம். அதாவது தன் யோசனை இன்றி இயல்புகளின்படி மட்டும் ஒழுகும் ஒருநிலை. அக்காலத்திலெல்லாம் மனிதன் காடுகளில் தன்னந் தனியே மற்றப் பிராணிகளைப்போல் வாழ்ந்து வந்தான். வேளா வேளைகளில் இரண்டு பிராணிகள் ஒரே செயலில் ஈடுபடும்போது ஒவ்வொன்றும் தன் தன் இயல்பூக்கத்தின் ஏவுதலை நிறைவேற்ற முயல்வதால் அவைகள் சண்டையிட நேரிடும். உதாரணமாக ஓர் பழத்தை இரண்டு பிராணிகள் பார்க்கின்றன. பார்த்ததும் இரண்டுக்கும் பசி அல்லது உணவூக்கம் என்ற இயல்பு தூண்டப்

படுகிறது. அத்தூண்டலை நிறைவேற்ற இரண்டும் முயலுகின்றன. விளைவு சண்டையே. இந்நிலையில்தான் ஆதி மனிதன் வாழ்ந்து வந்தான். ஆனால் மனிதனின் மேலான சக்தி அதாவது சிந்தனை தீர்மானம் முதலிய செயல்களை நடத்தும் திறமை காலாகாலத்தில் அவனில் மேலோங்க ஆரம்பித்தது. சிறு கூட்டமாக வாழும் போது ஒவ்வொருவனும தன்தன் இயல்புகளின்படி நடக்க முயல் வதால் விளையும் சண்டை சச்சரவுகளை நீக்க வழி தேடலானன். அவன் சிந்தனை இதற்கு உதவிற்று. கூட்டமாக வாழ்வதும் ஒரு இயல்புதான். ஆகவே இந்த இயல்பையும் நிறைவேற்ற வேண்டும். அப்படியானல் தனி மனிதன் தன் மனம்போல நடக்கமுடியாத ஓர் நிலை ஏற்படுகிறது.

மனிதன் ஓர் சமூகப்பிராணி (Social animal). அதாவது கூட்டமாக வாழ்வதை மனிதன் அதிகமாக நாடுகிறான். ஏனைய உயிர் பொருட்களுக்கும் இந்த இயல்பு இருந்தபோதிலும் மனித னுடைய அதிக சிக்கலான வாழ்க்கைக்கு இந்நிலை அதிக அத்தியா வசியம் என்பதை மனிதன் உணர்ந்து கொண்டான். தனி மனித னாக தனக்கு வேண்டியவற்றை தானே தேடிக்கொண்ட காலத்தி லெல்லாம் மனித வாழ்க்கை முன்னேறவில்லை. ஆனால் கூட்ட மாக ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஒத்துழைத்து அலுவல்களைப் பகிர்ந்து செய்ய முற்பட்டபோது வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டானது. இதுவே நாகரீகம் ஆகும். இப்பொழுதெல்லாம் வெகு காலத்திற்கு முன் மனிதன் நடத்திய தனி வாழ்க்கையைப் பற்றி மனதினுல்கூட எண்ணக்கூடாதவர்களாயிருக்கிறோம். சமூக வாழ்க்கை நடத்த மனிதன் பழகிக்கொண்ட வரலாறு ஒரு நெடுங் கதையாகும். அது ஓரிரண்டு நாட்களில் சாதிக்கப்பட்டதல்ல. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சமூக வாழ்க்கையில் மனிதன் தன்னை மாற்றி அமைத்துக்கொண்ட ஓர் நெடுநாள் வரலாறு தான் நாகரீக வளர்ச்சி.

சமூகம் என்பது மக்களின் ஓர் கூட்டமே ஆகும். நாம் முன் சொன்னபடி இப்படி கூட்டமாக வாழவேண்டும் என்பது மனித னின் இயல்புகளில் ஒன்றுதான். மேலும் கூட்டமாக வாழ்வதில் தனி மனிதனுக்கு பல நன்மைகள் உண்டு. முதலாவதாக தனி மனிதன் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதைவிட கூட்டத்தில் அவ னுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு அதிகம். அது மட்டும் அல்ல. வாழ்க்கையில் கூட்டுறவின் இன்பம் ஒரு முக்கிய காரியம். செயல் களைச் செய்வதிலும் தனி முயற்சியைவிட கூட்டு முயற்சி அதிக பலன் தருவதாகும். சிந்தித்து ஓர் முடிவுக்கு வருவதிலும்கூட

தனி மனிதனின் சிந்தனை சாதிப்பதைவிட பலரின் சிந்தனை அதிக நல்ல முடிவுக்கு வழி நடத்தும். இப்படி பல வகைகளில் கூட்டு வாழ்க்கை மனிதனின் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டது. எனவே மனிதன் கூட்டமாக வாழும் நிலை நாளுக்குநாள் பலப் பட்டது. சிறு கூட்டங்கள் பெருங் கூட்டங்களாக மாறி ஊர்கள் தோன்றலாயின. ஆங்கிலத்தில் ஊர் என்பதற்கு city என்று பெயர். ஊரிலுள்ள ஒவ்வொருவருக்கும் citizen என்று பெயர். இக்காலத்தில் ஒவ்வொரு மனிதனுமே ஏதாவது ஒரு சமூகத்தின் அங்கத்தினன் ஆகின்றான். அதாவது ஓர் citizen. கிரேக்க மொழியில் ஊர் என்பதற்கு Polis என்று பெயர். அதிலிருந்து தான் Politician என்ற பதம் வந்துள்ளது. இப்பதத்தின் சரியான பொருள் ஊரின் ஓர் குடி அல்லது அங்கத்தினன் என்பதுதான். ஆனால் கால உபயோகத்தில் அதன் பொருள் அதிகமாக திரிபடைந்துள்ளது. சமூகத்தில் மனிதன் வாழ்ந்து வந்தாலும் மனிதன் மனிதனே. அவனுடைய இயல்புகள் மறைந்து போவதில்லை. ஆகவே சமூகம் மக்களால் ஆக்கப்பட்டிருப்பதால் மனித இயல்புகள் சமூகத்தில் என்றும் வினைபுரிந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்நிலையிலும் மனிதன் சமூக வாழ்க்கையை திறம்பட நடத்த முடிகிறதென்றால் அதற்குக் காரணம் மனிதனுக்கு தன் இயல்புகளைக் கட்டுப்படுத்த கடவுள் கொடுத்திருக்கும் ஆற்றலே. ஏனைய உயிர்ப் பிராணிகளிலும் சில சமூக வாழ்க்கையை நடத்தும் முறை போற்றத்தக்கது. மனிதனும் அவற்றிலிருந்து படிக்கவேண்டிய பாடங்கள் உண்டு. ஆனால் இவற்றின் சமூக வாழ்க்கைக்கும் மனித சமூக வாழ்க்கைக்கும் ஒரு பெரும் வேறுபாடு உண்டு. இப்பிராணிகள் முற்றிலும் சுபாவ இயல்புகளாலேயே நடத்தப்படுகின்றன. சமூக வாழ்க்கையில் அவை நடந்துகொள்ளும் செயலும் இயல்பின்படியேதான் உள்ளது. மேலும் அவற்றின் சமூக வாழ்க்கை ஒரு நிரந்தரமானதாய் சிக்கலற்ற ஓர் எளிய முறையில் அமைந்திருப்பதால் அதில் சச்சரவுகள் ஏற்படுவதில்லை. ஆனால் மனித சமூகம் அவ்வளவு எளிய ஓர் அமைப்பு அல்ல அது அடிக்கடி மாறுவது. சூழ்நிலைகளால் அடிக்கடி பாதிக்கப்படுவது. மனிதன் ஓர் நிலையில் நிலைத்திருப்பவன் அல்ல. மேலும் மேலும் முன்னேறுவதிலும் நாடித்தேடுவதிலும் ஊக்கமுடையவன். எல்லாவற்றிலும் அதிகமாக அவன் (Free will) சுயசித்தமுடையவன். மனிதனுக்குக் கடவுள் கொடுத்த மேலான ஈவு இது ஒன்றே. ஆகவே சமூக வாழ்க்கையில் மனிதன் தன் இயல்புகளை தானே கட்டுப்படுத்தி கூட்டத்தின் ஒழுக்கத்திற்கு இசைய நடந்துகொள்ளவேண்டியவனாயிருக்கிறான். இதில்தான் சங்கடம் ஏற்படுகிறது.

ஒவ்வொருவனும் இயல்புப்படி தான் விரும்பினவற்றைச் செய்ய முயலுகிறான். ஆனால் மனிதன் தனியாக வாழ்வதில்லை. எப்பொழுதும் கூட்டமாகவே வாழுகிறான். கூட்டத்தில் வாழும் மனிதன் முற்றிலும் தன் மனம்போல நடக்கமுடியாது. அப்படி ஒவ்வொருவனும் நடந்தால் சமூக வாழ்க்கை நிலை பெறமுடியாது. அப்படியானால் மனிதன் சமூகத்தின் பொதுவான விருப்பப்படி தன் சொந்த விருப்பத்தை மாற்றி அமைக்கவேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. மனிதன் தன் இயல்பான ஆசைகளை நிறைவேற்றவேண்டும் என்பதும் அவனுக்கு கட்டாயம். ஆகவே அவனுடைய வாழ்க்கையில் ஓர் போராட்டம் உண்டாகிறது. இப்போராட்டத்தில் வரவர சமூகத்தின் கட்டாயம் மனிதனின் தனி ஆசையைவிட அதிக வல்லமை பெற்று வருகிறது. மனிதன் சமூகத்திற்கு அடிமை ஆகிவிட்டான். இதிலும் ஒரு தீமை உண்டு. சூழ்நிலையாலும் கால வேறுபாட்டாலும் பாதிக்கப்படும் சமூக வாழ்க்கை பல சமயங்களில் நல்நெறி தவறி அமையும்போது தனி மனிதனும அதன்படி நடக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறான் அவனுடைய தனி வளர்ச்சி தடைபடுகிறது. என்றாலும் மனிதன் தன் சிந்தனையை ஏற்றவாறு செலுத்தி தன்னுடைய இயல்புகளை அடக்கி ஆளுவதால் சமூக வாழ்க்கையில் நல்ல நிலை ஏற்பட முடியும் அதாவது சமூக வாழ்க்கையின் வெற்றி தனி மனிதனின் வெற்றியையே சார்ந்துள்ளது இப்படி ஒன்றையொன்று சார்ந்துள்ள இந்த இரண்டு காரியங்களும் மனித வாழ்க்கையில் இயற்கையாய் அமைந்து இருப்பதே ஓர் அற்புதம்.

தன் இயல்புகளை அடக்கி ஆள மனிதனுக்கு ஆற்றல் உண்டு என்று பார்த்தோம். பொதுவாக இந்த இயல்புகளில் அதிகமாக வல்லமை பெற்றது நான் என்ற ஆணவம் (Self). ஒவ்வொருவனும் தன் விருப்பப்படி இந்த இயல்புகளை நிறைவேற்ற முயல்வது கூட்டு வாழ்க்கையின் வெற்றிக்கு சாதகமாக இராது. சுயாதீனம் நல்லதுதான். மனிதன் அடிமை மனப்பான்மை கொள்ளக்கூடாது. அப்படியானால் சமூகத்தில் அவன் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை முதலாவதாக அவன் உணர்ந்து கொள்ள வேண்டும். தன் தனி விருப்பங்கள் ஒருபுறம் இருந்தாலும் சமூகத்தில் பிறருடைய விருப்பங்களும் உண்டு என்று அவன் உணர வேண்டும். அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டு மோதல் ஏற்படாதபடி ஒவ்வொருவனும் தன் தன் இயல்புகளை ஒப்புக்கொள்ளப்பட்ட சரியான வழிகளில் செலுத்த வேண்டும் [sublimate] இப்படி அவனவன் தானாக தன்னை நல் வழிப் படுத்திக் கொள்ளும்போது வளர்ச்சிக்கேடு நேரிடுவதில்லை.

மனிதன் சமூக வாழ்க்கை நடத்த வேண்டியவன் என்பது கடவுளின் திருவுளம். அதற்காகத்தான் இந்த இயல்புகள் எல்லா வற்றையும் அடக்கும் ஆற்றலையும் அவனுக்குக் கொடுத்துள்ளார். மற்றப் பிராணிகளைப் போல் அவன் இயல்புகளுக்கு அடிமைப் பட்டவனாக அல்ல இயல்புகளை தன் அடிமைகளாக உபயோகிக்க ஆற்றல் தந்துள்ளார். ஆனால் அதை அவன் உபயோகிப்பதை கடவுள் கட்டாயம் பண்ணாமல் அவனுக்கு தாம் கொடுத்த ஈவாகிய சுய சித்தத்திற்கு விட்டு விட்டார். இதில் தான் மனிதனின் பெரிய பொறுப்பு அடங்கி இருக்கிறது. கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் இப் பெரிய உண்மையை உணரவேண்டும். தான் சமூகத்தில் வாழ்பவன் என்றும் அதற்குத்தக்க தான் நடந்து கொள்வது கடவுளின் விருப்பம் என்றும் உணர்ந்து வாழ வேண்டும். ஆதியில் ஆதாமைப் படைத்த கடவுள் அவன் “தனியாய் இருப்பது நல்ல தல்ல” என்று கண்டு ஒரு வாழ்க்கைத் துணைவியை அவனுக்குக் கொடுத்தார். இஸ்ரவேல் ஜனர் [illegible] தன் ஊழியக்காரனாக தெரிந்து கொண்டார்.

அத்தியாயம் 2

குடிமைப் பண்பு

கூட்டு வாழ்க்கை நடத்தும் மனிதனுக்கு சில பண்புகள் தேவை. முதலாவதாக தான் கூட்டத்தில் ஒருவன் என்றும் தன்னைப்போல் உரிமையுள்ள மற்றும் பலர் கூட்டத்தில் உண்டு என்றும் அவன் உணரவேண்டும். தன் செயல்கள், சொற்கள், நினைவுகள் கூட பிறரைப் பாதிக்கும் என்ற உணர்ச்சி தேவை. **Col J. C. Willatt** என்ற பெரியார் கூறுவது: “மனித னுடைய பேச்சும் செயலும் பிறரை இரு விதங்களில் பாதிக்கின் றன, மற்றவர்களுக்கு மாதிரியாக இருப்பதோடு மற்றவர்கள் மீது விபரீத விளைவுகளை உண்டாக்குகின்றன”. இன்று சமூகத்தில் மக்களில் பலர் இந்த உணர்ச்சி அற்றவர்களாயிருக்கின்றனர். அடிக் கடி பிறரைப் பற்றி எண்ணம் அற்றவர்களாக நடந்து கொள்ளு வதால் சொல்வொண்ணா தீங்கு பிறர்க்கு விளைகின்றது. சமூகத் தில் நேரிடும் பல இன்னல்களுக்கும் இவ்வுணர்ச்சியின்மையே காரணம் இவ்வுணர்ச்சிக்கு சமூக உணர்ச்சி அல்லது குழு உணர்ச்சி என்று பெயர். ஆங்கிலத்தில் அது **Social sense or civic conscience** எனப்படும். இது சமூகத்தில் உள்ள ஒவ் வொரு அங்கத்தினரிடத்திலும் காணப்பட வேண்டிய முதல் முக்கிய அம்சம். சாதாரணமாக, ஓடும் வண்டிகளிலிருந்து எச்

சிலை பறக்க விடுபவர்கள், குளம் குட்டைகளை அசுத்தப் படுத்து பவர்கள், சாலையில் விதிகளை மீறி நடப்பவர்கள், கூட்டங்களில் பிறரை நெருக்கி தள்ளுபவர்கள், தம் தேவைக்கு மிஞ்சியதைத் தேடி பயன்படாது வைத்திருப்பவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்கள் இவ் வித சமூக உணர்ச்சி முற்றிலும் அற்றவர்கள். சில வேளைகளில் இப்படிப்பட்டவர்கள் செய்வது தங்கள் உரிமை எல்கைக்குள் அவர் கள் செய்யும் தீங்கற்ற செயல்களாகவே தென்படும். பிறர்க்கு தீங்கு விளைவிக்க வேண்டும் அல்லது இடையூறு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் இப்படி நடந்து கொள்வதில்லை ஆனாலும அவர்கள் அறியாமலே அவர்கள் செயல் பிறரைப் பாதிக்கின்றது.

மேலும் கூட்டத்தில் வாழும் ஒவ்வொருவனும் சமூக வாழ்க் கையினால் கிடைக்கும பல நனமைகளையும் அனுபவிக்க உரிமை பெற்றவன். உதாரணமாக படிப்பு, வைத்திய வசதி, போக்குவரவு சாதனங்கள், வியாபார வசதிகள், நகர பரிபாலனமுறை, பொது சுகாதாரம், தபால் வசதி, உல்லாசப் பொழுதுபோக்கு முதலிய பல சமூக எற்பாடுகளையும் உரிமையோடு ஒவ்வொருவனும் அனுபவிக்க லாம். ஆனால் இந்த உரிமையோடு இணைந்த ஒரு கடமையும் உண்டு சமூகத்தின் பற்பல அலுவல்களிலும் சமூக அங்கத்தினர் ஒவ்வொருவரும் எதாவது ஒரு பங்கு கொள்ளவேண்டும். என் கடமையை நான் செய்யாமல் சமூகத்தால் கிடைக்கும் உரிமைகளை மட்டும் நான் அனுபவிப்பது எனக்கு தகாது என்று ஒவ்வொரு வனும் உணர வேண்டும். எனென்றால் தனித்தனி அங்கத்தினரின் உழைப்பின் மேலேயே சமூக நலன்கள் யாவும் கட்டப்பட்டுள்ளன. ஆகவே சமூக நலன்களை நல்ல முறையில் அனுபவிக்க வேண்டு மானால் ஒவ்வொருவனும் தன் தன் கடமையைச் செவ்வனே நிறை வேற்ற வேண்டும. சோம்பேறிகள் சமூகத் துரோகிகள் ஆவர். ஆகையால்தான் பரி. பவுல் அப்போஸ்தலன் "வேலை செய்யா தவன் சாப்பிடலாகாது" என்றார். இக்காலத்தில் சமூகத்தில் காணப்படும் பெரிய ஊழல்களில் இது ஒன்று. மக்கள் எத் துறையிலும் தங்களுக்கு கிடைக்க வேண்டியதை அதிகம் அதிகமாக வற்புறுத்திக் கேட்கிறார்கள். ஆனால் வேலை செய்ய அநேகருக்கு மனது இல்லை. "அதிக வருவாய், குறைந்த வேலை" என்பதுதான் இக்காலத்தில் எங்கும் கோரிக்கை. இந்நிலைமாற வேண்டும். அரசியல் விடுதலை பெற்ற இந்திய தேசம் பொருளாதார சமூக விடுதலையாவும் பூரணமாய்ப் பெற சமூக அங்கத்தினர் யாவரின் உழைப்பும் உற்பத்தியும் அதிகரிக்க வேண்டும் என்பதுதான் பெரிய தலைவர்களின் வேண்டுகோள். அது முற்றிலும் உண்மை.

சமூகத்தில் கூட்டு வாழ்க்கையின் வசதிகள் இருந்த போதி லும் தன வாழ்க்கை சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வொருவனும் சில அலுவல்களைத் தானே செய்துகொள்ள வேண்டியவனுயிருக் கிறுன். எல்லாவற்றிற்கும் பிறரைச் சார்ந்து இருப்பது முன்னேற் றத்திற்கு ஓர் முட்டுக்கட்டையே. தன் அலுவல்களில் மிகுதியான வற்றை தானே செய்துகொள்ளும் ஆற்றல் ஒவ்வொரு மனித னுக்கும் அவசியம். இதில் குறைவு படுபவன் பிறருடைய உதவி யை அதிகமாக நாடுகிறுன். அதனுல் மொத்தத்தில் முன்னேற் றம் குறையும். சமூகத்தில் உள்ள எல்லா அங்கத்தினரும் தன் ஞற்றல் பெற்றவர்களாக [Self reliant] இருப்பின் பொதுநல முன்னேற்றம் அதிகரிக்கும் என்பதற்கு ஐயமில்லை. தன் காரியத் திற்காக அடிக்கடி பிறர் உதவியை நாடும்போது ஒருவன் பிறருக்கு இடையூறு செய்பவனுகவும் இருக்கின்றுன்.

தனி மனிதனின் நல்வாழ்வு சமூகத்தின் நல்வாழ்வைப் பொறுத்தது என்ற உணர்ச்சியும் ஒரு முக்கிய குடிமைப் பண்பாகும். ஒருவேளை தான் மட்டும் நல்ல வாழ்க்கை நடத்திக் கொள்ளலாம் என்று ஒருவன் எண்ணுவானுனுல் அது கூடாத காரியம். உதாரண மாக ஒருவனுக்கு திரண்ட பொருள் வசதி இருந்து அவன் தன்னையும் தன் வீட்டையும் மட்டும் சுத்தமாகவும் ஆரோக்கிய மாகவும் வைத்துக்கொண்டு தான் வியாதியின்றி வாழலாம் என்று எண்ணுகிறுன. ஆனுல் அவனைச் சுற்றிலும் இருக்கும் ஏனைய மக்க ளிடை தொற்று வியாதி பரவி வரும்போது இம்மனிதனும் அவன் குடும்பமும் அதற்குத் தப்பிக் கொள்வது அவ்வளவு சுலபம் அல்ல. ஏனென்றுல் பல விஷயங்களிலும் அவனுக்கும் மற்றவர்களுக்கும் தொடர்பு நிச்சயம் ஏற்படுகிறது. சமூகத்தில் ஒருவன் தனக்கு வேண்டிய பொருளைத் திரட்டி வைத்துக்கொண்டு, பிறர் பொருள் இல்லாமல் இருக்கும்போது தான் மட்டும் நிம்மதியாயிருக்க முடி யாது திருடர் அல்லது கொள்ளைக்காரர் அவன் பொருளைக் கவர்ந்து கொள்வர் என்ற பயம் எப்போதும் அவனைப் பீடிக்கும். ஆகவே ஒரு நல்ல மனிதன் தன் நல்வாழ்வை விட சமூகத்தின் நல்வாழ்வையே அதிகமாய் விரும்பி நாடுவான். இவ்வுணர்ச்சிக்கு சமூகப்பற்று [patriotic sense] என்று பெயர். அதிக அளவில் இது நாட்டுப்பற்றுக மாறுகிறது. தன் உணர்ச்சியை விட நாட்டு உணர்ச்சி அல்லது தேசப்பற்று அதிக வல்லமை பெறுகிறது. சில நாடுகளில் இவ்வுணர்ச்சி அத்து மீறி ஊட்டப்படுவதாலும் போற் றப்படுவதாலும் தனி மனிதனுடைய ஆள் தத்துவம் முற்றி லும் அழிக்கப்படுகிறது. ஆனுல் ஞானம் உள்ள மனிதன் இரண் டையும் காப்பாற்றிக்கொள்வான். சில சமயங்களில் பொது

நலனுக்காக தன் சொந்த நலனையே தியாகம் செய்ய வேண்டிய நிலைமையும் ஏற்படும். இது சிறந்த குடிமைப பண்பாகும.

மனிதன் சமூகத்தில் அடங்கி விட்டபோதிலும் அவனுடைய தனி ஆள் தன்மைக்கும் சமூகத்தில் ஓர் முக்கிய இடம் உண்டு. சமூக வாழ்க்கையில் ஒப்புக்கொள்ளப்படும் சட்டங்கள் ஒழுக்க விதிகள் யாவும சமூகத்திலுள்ள மக்களாலேயே ஏற்படுத்தப்படுபவை. இவை உண்மையாகவே பொது நலனுக்கு சாதகமாக அமைய வேண்டுமானால் அந்தப் பொறுப்பு சமூக அங்கத்தினரையே சார்ந்தது. மக்கள் நன்ருக யோசித்து நிதானித்து, தீர்மானித்து, நல்ல முடிவுகளுக்கு வரவேண்டும். அப்படியானல் சமூகத்திலுள்ள ஒவ்வொருவனும் நல்ல அறிவு அடைந்தவனுகவும் சிந்தனையிலும் தீர்மானத்திலும் தக்க பயிற்சி பெற்றவனுகவும் இருக்க வேண்டும். சிந்தனை செய்யாத மக்கள் சமூகம் குருட்டுத் தேனீ சமூகத்திற்கு சமம். எல்லாரும் மொத்தமாக அழிவதே அவர்கள் முடிவு சமூகம் அழியாமல் வளர வேண்டுமானல் தனித்தனி மனிதரில் சிந்தனை சிறந்து விளங்கவேண்டும். இதற்கு கல்வி அவசியம். சில சமயங்களில் நல்ல சிந்தனை செய்யும மனிதன் ஒருவன் தவருன வழியில்செல்லும் சமூகத்திலுள்ள பெரும்பாலான மக்களை எதிர்த்து தன் தீர்மானத்தை வற்புறுத்தவும் அவனுக்கு ஒரு கடமை உண்டு என்று J. C. Hill என்ற பெரியார் கூறுகின்ருர்.

சமூகத்தில் எல்லா மனிதரும் ஒன்றுபோல் அமைவதில்லை. குறைவுள்ள மனிதரால் ஆன சமூகத்தில் குறைகள் காணப்படுவது இயற்கை. அது சமூக வாழ்க்கையின் தவறு அல்ல; மனிதன் ஒவ்வொருவனும் நல்ல குடிமைப் பண்புகளை அடையாமல் இருப்பதின் விளைவே இந்நிலைக்கு காரணம். அப்படியானல் நல்ல அங்கத்தினரின் கடமை என்ன? சமூகத்தில் காணப்படும் குறைகளை அம்பலப்படுத்தி வீண் குறை கூறிக்கொண்டு திரிவதில் பயனில்லை. குறைகளைத் திருத்த தைரியமாக முன்வந்து தான் முன் மாதிரியாக நடந்து காட்டவேண்டும் குறைகளுக்குக் காரணமான நிலையை நீக்க முயல வேண்டும். இப்படி அழிவு வேலையில் அல்ல ஆக்க வேலையில் ஈடுபடுவதே நல்ல குடிமைப் பண்பு.

வாழ்க்கை இன்பமாயிருக்க வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம். அதற்கென்றே இயற்கையில் பல வசதிகளை அமைத்துள்ளார். இயற்கை அழகு, சங்கீதம், மழலை இன்பம், விளையாட்டுகள் முதலியவற்ருல் மனிதன் தனக்கு களிப்பூட்டிக் கொள்வதோடு கூட சமூகத்திற்கும் களிப்பூட்டுகிருன். ஓயாது துக்கமுகமாய்

இருப்பவன் தன்னைக் கெடுத்துக் கொள்வதோடுகூட சமூகத்திற்கும் தீங்கு இழைக்கிறான். "எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்", என்பது பரி. பவுலின் கட்டளை. சந்தோஷம் சமூகவாழ்க்கையின் மற்றொரு முக்கிய அம்சம்.

கூடி வாழும் மக்களிடையே ஓரளவு கட்டுப்பாடு அவசியம் என்று பார்த்தோம். அதாவது ஒவ்வொருவனும் தன் மனங் கொண்டபடி நடக்க முற்பட்டால் சமூக வாழ்க்கையில் மோதல்கள் ஏற்படும். அப்படியானால் எல்லாருடைய நன்மையையும் கருதி பொதுவான சில ஒழுக்கமுறைகள் வரையறுக்கப்பட்டு, எல்லா ராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, கைக்கொள்ளப்பட வேண்டும். சமூக நல்வாழ்வுக்கு மிக அவசியமான ஓர் அடிப்படை இது. தனிமனிதன் இதற்குக் கட்டுப்படவேண்டும். அவன் சுயாதீனமாக இதற்கு அமைந்து நடப்பதே சிறந்த குடிமைப் பண்பு. அப்படி நடக்காவிட் டால் அவனுக்குச் சங்கடம் ஏற்படும். இச் சங்கடத்திற்கு அல்லது தண்டனைக்கு அல்லது சமூகத்தின் பழி சாற்றலுக்குப் பயந்து கட்டுப்படுவாரும் உண்டு. இது நல்ல குடிமைப் பண்பு அல்ல. சிக்கலான வாழ்க்கையுள்ள இக்கால சமூகத்தில் பற்பல துறை களிலும் மனிதரைக் கட்டுப்படுத்தும் சமூக சட்ட திட்டங்களையும் ஒழுக்க விதிகளையும் அறிந்திருக்கவேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியம்.

பொதுநலனுக்கான பல வசதிகளை அமைத்து பல அலுவல் களைச் செய்யவேண்டியதிருக்கும். ஒரு சமூகத்திலுள்ள எல்லா மக்களும் அத்தனை காரியங்களிலும் ஈடுபட்டு செய்யமுடியாது. வெவ்வேறு அலுவல்களை சில குறிப்பிட்ட நபர்கள் மட்டும் கவனித் துக்கொண்டால் அவை நன்கு நடைபெறும். சமூக முன்னேற்றத் திற்கும் அது உதவியாயிருக்கும். ஆகவே வெவ்வேறு அலு வல்களில் சிறப்பான திறமைபெற்ற நபர்களை அந்த அலுவல்களைச் செய்யும்படி சமூகம் எதிர்பார்க்கிறது இவ்வித ஒழுங்கு மிக அவசியமானது. இப்படிப்பட்ட நபர்களைத் தெரிந்துகொள்ளும் பொறுப்பு சமூகத்திலுள்ள மக்களைச் சேர்ந்தது. ஒரு வேலையைச் செய்யத் தகுதியுள்ளவர் என்று பெரும்பாலான மக்கள் நம்பும் நபர் களை அவ்விதம் தெரிந்துகொள்ளலாம். இத்தேர்தல் முறை சமூகத்தின் மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஓர் பெரிய உரிமை. அதைச் செவ்வனே உபயோகித்து தக்க மக்களை அந்தந்த அலுவல்களைச் செய்யும்படி சமூகத்தினர் ஏற்படுத்தும்பொழுது கூட்டுவாழ்க்கை நன்முறையில் நடைபெறும். ஆகவே சமூகத்தில் வாழும் ஒவ்வொருவனும் இப்பொறுப்பை உணர்ந்து அதை நிறை

வேற்ற வேண்டும். குடியாட்சி முறை நிலவிவரும் இந்நாட்களில் இது மக்களிடையிருக்கவேண்டிய ஓர் முக்கிய பண்பு.

காலஞ்சென்ற V. S. S. சாஸ்திரி என்ற பெரியார் குடிமைப் பண்புகளை மூன்று வகைப் படுத்துகிறார். அவர் கருத்துப்படி ஒரு நல்ல சமூக அங்கத்தினன் பொது உணர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். மேலும் அவன் தானாகவே சிந்திக்கக்கூடியவனாயிருக்க வேண்டும். கடைசியாக சமூகத்தின் நலனை அவன் முன்னேற்ற வேண்டும். இக்கருத்துக்களும் நாம் முன் பார்த்த கருத்துக்கட்கு இசைந்திருப்பதைக் காணலாம்.

J. C. Hill என்ற பெரியார் நற்குடிப் பண்புகளைப்பற்றி எழுதும்போது அதை எட்டு அம்சங்களாகப் பிரித்துள்ளார். அவையாவன: நல்ல ஆரோக்கியம், நல்ல கல்வி, நல்ல மரியாதையான நடத்தை, கலாச்சாரம், தெளிந்த யோசனை, திட மனோநிலை, அரசியல் அறிவு, ஓய்வு வேளையை நன்றாகப் பயன் படுத்தல் ஆகும். இந்த அம்சங்களும் நாம் முதலில் பார்த்த கருத்துக்கட்கு ஒத்தவை என்பதில் ஐயமில்லை. ஆகவே மேற்கூறிய பண்புகளையுடைய மக்களே சமூகத்தில் வாழத் தகுதியுடைவர்.

இப்பண்புகளைப் பெற்றுக்கொள்ள மனிதனுக்குப் பல வாய்ப்புகள் இயற்கையாய் அமைந்திருந்தபோதிலும் அவன் தன்னியல்புகளை அடக்காமல் அவை போகும் போக்கில் விட்டுவிடுவதால் குடிமைப்பண்பற்றவனாக மாறுகிறான். என்றாலும் சமூகத்தில் அவன் இப்பண்புகளுடன் வாழப் பல வகைகளிலும் ஏவப்படுகிறான். சமூக விதிகள், கட்டுப்பாடுகள், தண்டனைகள், பிறர் பழிப்பு ஆகியவற்றால் அவன் சமூகத்தில் ஒத்து வாழக் கட்டாயப் படுத்தப்படுகிறான். அப்படிக் கட்டாயம் வரும்போது அவன் பிறரை ஏமாற்றி மறைவாகத் தப்பிக்கொள்ளப் பார்க்கிறான். வெளிக்கு நல்ல வாழ்க்கை நடத்தி மறைவாகச் சமூகத் துரோகமான செயல்களில் ஈடுபடுபவர்கள் பலர் உண்டு இக்காலத்தில். அது தான் இன்றைய சமூகத்தின் இழிநிலைக்குக் காரணம். ஒருவரையொருவர் நம்பி சமூகத்தில் மக்கள் வாழ்கின்றனர். உதாரணமாக நோயாளியொருவன் வைத்தியரிடம் மருந்து வாங்கிச் சாப்பிடும்போதோ அல்லது அறுவை சிகிச்சைக்குட்படும் போதோ முற்றிலும் வைத்தியரையும் அவர் ஆற்றலையும் நம்பியே அதைச் செய்கிறான். சலவைக்காரனிடம் அவனை நம்பியே தங்கள் ஆடைகளைக் கொடுக்கின்றனர் மக்கள். தபால் அதிகாரியிடம் அவனை நம்பியே தங்கள் கடிதங்களையும் பணத்தையும் மற்ற

வர்கள் கொடுக்கின்றனர். இரயில்வண்டி யோட்டும் மனிதனின் திறமையையும் கவனத்தையும் நம்பித்தான் பிரயாணிகள் இரயில் வண்டியிலேறுகின்றனர். இந்த நம்பிக்கையை ஒவ்வொருவரும் காப்பாற்றவேண்டியது மிக அவசியம். நம்பிக்கைத் துரோகம் தலைகாட்டுமானால் சமூக அமைப்பே குலைந்துவிடும். என்றாலும் சிலர் இந்நம்பிக்கைக்குத் தகுதியற்றவர்களாகவே சமூகத்தில் வாழ்ந்து பிறரை ஏமாற்றித் திரிகின்றனர். ஆனால் அவர்கள் சட்டத்தினால் பிடிபடுவதில்லை. இந்த நிலை மாறவேண்டுமானால் சமூகத்தில் ஒவ்வொருவனும் தெய்வ பயம் உள்ளவனாக இருத்தல் வேண்டும். மனிதரை வஞ்சிப்பது சுலபம். ஆனால் எங்கும் இருந்து எல்லாவற்றையும் காணும் கடவுள் ஒருவர் உண்டு என்ற உணர்ச்சி மக்கட்குத் தேவை. இவ்வுணர்ச்சியும் பயமும் உடையவன் சமூகத்தை ஏமாற்றத் துணியமாட்டான். இதுவே நல்ல சமூக வாழ்க்கைக்கு மிக அவசியமான ஓர் அடிப்படை. மனச்சாட்சி மழுங்கிப் போகும்போது மனிதன் மிருகமாக மாறுகிறான்.

கிறிஸ்தவர்கள் சமூகத்தில் அதிகப் பொறுப்புடையவர்கள் ஆவர் பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தே கடவுளின் ஜனம் சமூக வாழ்விற்கு ஆயத்தப்படுத்தப்பட்டது. பத்துக் கற்பனை ஓர் நல்ல சமூக அமைப்பின் அடிப்படை விதிகளே தவிர வேறல்ல. பின் ஆறு கற்பனைகளில் ஓர் மனிதன் தன் பிறனோடு அல்லது சமூகத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகள் வரையறுக்கப் பட்டுள்ளன ஆனால் அவன் அவ்விதம் நடந்துகொள்ள அவனைத் தூண்டுவது முதல நான்கு கற்பனைகளில் சொல்லப்பட்டுள்ள தெய்வ பக்தியே ஏசுக் கிறிஸ்துவும் இந்தக் கற்பனைகளைச் சுருக்கி "தேவனிடத்தில் அன்பு கூர்வாயாக, பிறனிடத்திலும் அன்பு கூர்வாயாக" என்றார். இப்படிப்பட்ட கற்பனைகளைப் பெற்ற கிறிஸ்தவர்கள் நல்ல குடிமைப் பண்புகளமைந்த மக்களாகச் சமூகத்தில் வாழவேண்டியது எத்தனை அவசியம்! "அவனவன் பொய்யைக் களைந்து பிறனுடனே மெய்யைப் பேசுவானாக" என்று பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளார். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளில் பலர் சமூகத் துரோகமான செயல்களை வெகுவாய்க் கண்டித்தனர் ஆகவே கிறிஸ்தவர்கள் பொறுப்புள்ள சமூக அங்கத்தினராக வாழவேண்டும்.

அத்தியாயம் 3

சமூகமும் அரசியலும்

சமூக வாழ்க்கை நன்கு நடைபெற பற்பல அலுவல்களைப் பிரித்துச் செய்யவேண்டுமென்று பார்த்தோம். பொது நலனுக்கான இப்படிப்பட்ட செயல்களைச் செய்ய மக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆகவே ஒரு ஒழுங்கு அவசியப்படுகிறது. அலுவல்களைத் தீர்மானிப்பதும அவசியமானவற்றைக் கண்டு நிறைவேற்றுவதும் அதற்கு வேண்டிய பொருளாதாரம் முதலிய வசதிகளைத் திட்டம் பண்ணுவதும் ஆகிய யாவற்றையும் திட்டம் பண்ண ஓர் ஏற்பாடு வேண்டும் இதற்குத்தான் ஆளுகை என்று பெயர். இப் பொதுக் காரியங்களைக் கண்காணிக்கும் மக்கள் சமூகத்தில் தலைவர்கள் என்று அழைக்கப்படுவார்கள். மற்றவர்களைவிட தலைவர்கள் சாதாரணமாக அதிக ஆற்றல் படைத்தவர்களும் அதிக ஆர்வம் உள்ளவர்களுமாயிருப்பர் சிலருக்கு இயற்கையிலேயே இந்தத் தகுதி அமைந்துள்ளது. வேறு சிலர் தங்கள் உழைப்பினால் இந்தத் தகுதியடைகின்றனர். எப்படியிருந்தாலும் சமூக ஆளுகையில் தலைவர்கட்கு ஓர் தனியிடம் உண்டு. சில சமயங்களில் ஒரு சமூகத்தின் அலுவல்களை ஒரு தனிப்பட்ட மனிதன் கண்காணித்து தன் இச்சைப்படி நடத்துவதுண்டு. அவன் அரசனென்றழைக்கப்படுகிறான். ஆதியிலிருந்தே சமூகத்தில் மக்கள் சில தலைவர்களால் அல்லது ஒரு அரசனால் ஆளப்பட்டு வருகின்றனர். இதுவும் ஒரு இயற்கையமைப்பே. அப்படி ஆளும் தலைவர்கட்கு அடங்கி நடப்பது சமூகத்தில் மற்றவரின் கடமை. தலைவனில்லாத சமூகம் மேய்ப்பனில்லாத மந்தைக்கு சமம் என்பது வேத வாக்கு ஆனால் ஒரு நல்ல சமூகத்தில் ஆளும் ஆற்றல் எல்லா மக்களுக்குமே இருக்கவேண்டும். ஆளும் ஆற்றலோடு ஆணைக்கடங்கும ஆண்மையும் அடைந்தால் நன்றாயிருக்கும். இன்றைய சமூகத்தில் இஃது அபூர்வம். தாங்கள் தலைவர்களாக இருக்கவேண்டுமென்று விரும்புவோர் பலர். அவர்கள் மற்றவர்களின் ஆணைக்கு அடங்குவதில்லை. வேறு சில மக்களோ இதைப் பற்றி கவலைப்படுவதேயில்லை. ஓர் நல்ல ஆட்சிமுறை சமூக வாழ்விற்கு இன்றியமையாதது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் கடவுள் தாமே மக்களுக்கு இராசாவாக இருந்தார் அவருடைய கற்பனைகளின்படி மக்கள் நடந்தார்கள். அவற்றின்படியே அவர்கள் நியாயம் விசாரிக்கப்பட்டனர். அவர்களுடைய வாழ்க்கையின் பல துறைகளிலும்

கடவுளே தலையிட்டு அவர்கட்கு வேண்டியவற்றைச் செய்தார். தமது இச் செயலை நடத்த அவர் ஒரு தலைவனை அல்லது தீர்க்கதரிசியைத் தெரிந்துகொண்டார். அவனை அச் சமூக மக்களிலிருந்தே தெரிந்து கொண்டார். இவ்வித ஆட்சிமுறை கடவுளாட்சி முறை (Theocracy) எனப்படும். ஆனால் கடவுளாட்சி முறை அந்த சனங்களால் தள்ளப்பட்டது. மனித சுயசித்தம் அவனை மேற்கொண்டதால் மனிதனே மனிதனுக்கு இராசாவாக வேண்டுமென்று விரும்பினான். கடவுள் அவன் விருப்பத்திற்கு இடங்கொடுத்தார் தன் செயலின் முடிவை மனிதன் தானே யுணர்ந்து கொள்ளட்டுமென்று எண்ணி அப்படியே விட்டு விட்டார். ஏனென்றால் கடவுள் மனிதனைக் கட்டாயப்படுத்துபவரல்ல. மனிதன் மனிதனுக்கு அடிமையாகக் கூடாது என்ற தன் விருப்பத்தை மட்டும் அவனுக்குத் தெரிவித்தார். அதிலிருந்து அரசனுடைய ஆட்சி முறை நிலவியது ஆனால் மனிதனுக்கென்று கடவுள் கொண்ட நோக்கம் தவறமுடியாது. எனவே இராசாக்களிருந்த போதிலும் தொன்றுதொட்டு மனித உள்ளம் மற்றொரு மனிதனுடைய ஆட்சியை எதிர்த்தே வந்துள்ளது. சில சமூக வசதிகட்காக மனிதன தன்னை இவ்வித ஆட்சிமுறைக்குட்படுத்திய போதிலும் அவன் மனம் சுயாதீனத்தையே நாடி நின்றது. ஆகவே அடிக்கடி சமூக வரலாறுகளில் மன்னருக்கு விரோதமான புரட்சிகள், யுத்தங்கள் நிகழ்ந்து வந்தன. ஆட்சி முறைகளிலும் பல்வேறு காலங்களில் பல மாறுதல்கள தோன்றின. ஏதாவது ஒரு சிறந்த ஆட்சி முறையைக் கண்டுபிடிக்க மக்கள் முயனறனர். பலவித முறைகளை அமைத்து நடைமுறையில் அவற்றைப் பரிசோதித்துப் பார்த்தனர். ஒவ்வொன்றிலும் சில சிறப்புகள் இருந்தாலும் மனித உள்ளத்துக்கு முற்றிலும திருப்தியளிக்க கூடிய ஒரு முறையும் அமையவில்லை. சில ஆட்சி முறைகளைப்பற்றி ஈண்டு சுருக்கமாக தெரிந்து கொள்வோம்.

1. முடியாட்சி (Monarchy):— முடியாட்சி அல்லது மன்னராட்சி மிகப் பழமையானது. முற்காலத்தில் ஒரு கூட்டத்தைப் பரிபாலிக்கும் தலைவனாகிய காவலன் என அழைக்கப்பட்டவன் நாளடைவில் மன்னன் அல்லது அரசன் ஆனான். துவக்கத்தில் மன்னன் பதவி பரம்பரையாக இருக்கவில்லை. தகுதியுள்ளவனையே மன்னனாக மக்கள் தெரிந்தெடுத்தனர். வரவர பரம்பரை மன்னராட்சி ஏற்பட்டுவிட்டது. முதலில் முடியாட்சி முறை காவல் அரசாங்கமாகவே (Police Government) இருந்து வந்தது. அதன்படி வெளிநாட்டு ஆக்ரமிப்பு ஏற்படாமல் நாட்டைப் பாதுகாப்பதும் உள் நாட்டில் அமைதி நிலவச் செய்வதுமே

மன்னரின் கடமைகளாயிருந்தன. அக்கால மன்னர் எதேச்சாதிகாரம் உடையவர்களாயிருந்தனர். காலப்போக்கில் மக்களின் உரிமை வற்புறுத்தப்பட்டதால் மன்னரின் எதேச்சதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. இதன் விளைவாகக் கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சி முறை (Limited Monarchy) உருவெடுத்தது. இவ்வித ஆட்சி முறையை சனநாயக முடியாட்சி என்று சொல்லலாம் தற்காலத்திலுள்ள முடியாட்சிகளில் முக்கியமானவை இவ்வித அமைப்பையே கொண்டுள்ளன. இங்கிலாந்திலுள்ள முடியாட்சி முறை இதற்குத் தகுந்த சான்றாகும்.

2. சிலராட்சி. (Oligarchy):— இஃது கிரேக்க நாட்டில் முற்காலத்தில் உருவாயிற்று. பெரிய நகரங்கள் தனி நாடுகளாக எண்ணப்பட்டு தனியாட்சி பெற்றிருந்த காலத்தில் இம்முறை பல இடங்களில் ஏற்பட்டது. முடியாட்சியிலுள்ள குறைகளால் சில இடங்களில் முடியாட்சிமுறை பிரபுக்களால் நீக்கப்பட்டு பிரபுக்களின் ஆட்சி ஏற்பட்டது (Aristocracy). பிரபுக்கள் அல்லது சலுகையும் ஆட்சித் திறனும் பெற்ற சிலர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினர். கிரேக்நாட்டில் பல இடங்களிலும், இடைக்காலத்தில் வெனிஸ், ஜெனோவா என்ற இடங்களிலும் இவ்வித ஆட்சி தழைத்தோங்கியது. சிலராட்சி சுயநலமுறையில் இயங்கத் தலைப்பட்டபோது ஆங்காங்கே குழப்பங்களும் கிளர்ச்சிகளும் உண்டாயின. எனவே இவ்வாட்சிமுறை வெகுகாலம் நீடிக்கவில்லை. தற்காலத்தில் இவ்வித ஆட்சிமுறை எங்கும் அமுலிவில்லை.

3. ஜனநாயக முறை:— (Democracy) இதை ஜனநாயக ஆட்சி என்றும் சொல்வர். குடிகட்குப் பொறுப்புள்ளதாக இயங்கும் ஆட்சிமுறையே இது. இவ்வாட்சி முறையும் முதன் முதலில் கிரேக்கநாட்டில்தான் உருவாயிற்று துவக்கத்தில் ஏற்பட்ட ஜனநாயக முறைக்கும் இப்போதுள்ள ஜனநாயக முறைக்கும் சிறிது வேறுபாடு உண்டு. அக்காலத்து கிரேக்க ஜனநாயக முறை நேரடியான ஜனநாயக முறை (Direct Democracy) எனப்பட்டது அதன்படி வயதுவந்த மக்கள் அனைவருமே கூடி, சட்டங்களை இயற்றி ஆட்சி நடத்தினர். அக்காலத்தில் தனித்தனி நாடுகளாக இருந்ததால் இம்முறை சாத்தியமாயிற்று அத்தேனே பட்டணம் (Athens) இவ்வித நேரடியான ஜனநாயக ஆட்சியைப் பெற்றிருந்தது ஆனால் இக்காலத்தில் நாடுகள் பரந்து பெருகியிருப்பதால் அம்முறை சாத்தியப்படாது. எனவே தற்போது ஜனநாயக முறையுள்ள நாடுகளில் மக்களால்

தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிகளின் மூலமாகவே ஆட்சி நடைபெறுகிறது. இவ்வித ஆட்சி பிரதிநிதித்துவ ஜனநாயகம் (Representative Democracy) அல்லது பார்லிமெண்டரி ஜனநாயகம் (Parliamentary Democracy) என்று அழைக்கப்படும். இங்கிலாந்திலுள்ள கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சி நடைமுறையில் ஜனநாயக பொறுப்பாட்சியாகவே திகழ்கின்றது.

4. குடியாட்சி (Republic) ஜனநாயக ஆட்சி முறையும் குடியாட்சி முறையும் நடைமுறையில் ஒன்றுபோல் தோன்றிய போதிலும் அமைப்பில் இரண்டுக்கும் ஓர் வேறுபாடு உண்டு ஜனநாயக ஆட்சிமுறையுள்ள சில இடங்களில் ஆட்சித் தலைவராக மன்னர் இருக்கலாம். இங்கிலாந்து தேசம் இதற்கு ஓர் உதாரணம். ஆனால் குடியாட்சி முறையில் மன்னருக்கு இடமே இல்லை. குடியாட்சியுள்ள இடங்களில் வயது வந்த குடிகள் அல்லது மக்களால் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றனர். குடியாட்சி முறையில் ஆட்சித்தலைவன் மக்களால் அல்லது மக்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இத்தலைவரின் பதவிக்காலமும் ஓர் குறிப்பிட்ட கால அளவுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குடியாட்சி முறையில் பலதரங்களும் வேறுபாடுகளும் உண்டு பிரபுக்களாட்சியை அடிப்படையாகக்கொண்ட குடியாட்சி முதல் உண்மையான ஜனநாயகக் குடியாட்சி முறைவரை (Democrative republic) பலதரப்பட்ட குடியாட்சி முறைகள் உண்டு இடைக்காலத்தில் வெனிஸ், ஜெனோவா என்ற இடங்களில் இருந்த பிரபுக்களாட்சி முறை குடியாட்சி என்ற பெயருடனேயே இயங்கி வந்தது. இக்காலத்தில் ஜனநாயக ஆட்சி முறையைப் பெற்ற குடியரசுகள் பல உள. நம் நாடாகிய இந்தியா ஓர் ஜனநாயகக் குடி ஆட்சி பெற்றுத் திகழ்கின்றது. இப்படிப்பட்ட ஆட்சி பெற்ற நாடுகளில் மிகப் பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததும் அமெரிக்க ஐக்ய நாடுகளே.

ஜனநாயகக் குடியரசில் கட்சியமைப்பு முறை ஓர் முக்கிய அம்சமாகும். நிர்வாகத்தை நடத்தும் கட்சியின் குறைகளை எடுத்துக் காட்டுவதற்கு சமபலமுள்ள எதிர்க் கட்சியொன்றிருந்தால்தான் ஜனநாயக ஆட்சி திறம்பட நடைபெறும். இவ்வித அமைப்புள்ள நாடுகளில் சர்வாதிகார ஆட்சி தோன்றமுடியாது இங்கிலாந்து, அமெரிக்க ஐக்ய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளின் அரசியலில் இரு கட்சி முறை இருப்பதால் ஆட்சி திறம்பட இயங்கி வருகிறது. ஆனால் பல அரசியல் கட்சிகள் ஒரு நாட்டில் இருப்பதால் குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

மேலும் இக்காலத்திலுள்ள ஜனநாயக ஆட்சிமுறையிலும் குடியாட்சிமுறையிலும் மக்களின் நல்வாழ்வு (Welfare) முக்கிய குறிக்கோளாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. இதுவே ஆபிரகாம் லிங்கனால் வரையறுக்கப்பட்டபடி "மக்களுக்காகவே மக்களாலேயே மக்கள் ஆளப்படுவது" என்ற ஆட்சிமுறையாகும். இந்தியப் புரட்சிக் கவியாகிய பாரதியாரும் "நாமெல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்றபோது இதே கருத்தைத்தான் வெளிப்படுத்தினார்.

5 சர்வாதிகார ஆட்சிமுறை :– (Dictatorship) முற்காலத்திலுள்ள சர்வாதிகார ஆட்சிமுறை (Dictatorship இக்காலத்திலுள்ள சர்வாதிகார ஆட்சி முறையினின்று வேறுபட்டது. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சர்வாதிகார ஆட்சி முறையில் இத்தாலியில் ஏற்பட்ட பாசிச ஆட்சிமுறை (Fascism)யும் ஜெர்மனியில் ஏற்பட்ட நாசிச ஆட்சிமுறை (Nazism)யும் குறிப்பிடத்தக்கவை.

(a) பாசிசம் (Fascism) பாசிசம் என்பது முதல் உலகப் போருக்குப்பின் 1919ம் ஆண்டில் இத்தாலியில் தோன்றிய ஓர் அரசியல் ஆகும். இந்த இயக்கத்தினால் தோன்றிய பாசிசக் கட்சி 1922ம் ஆண்டில் முசோலினி என்பவர் தலைமையில் இரண்டு லட்சம்பேர் கொண்ட படை பலத்துடன் ரோம் நகருள் புகுந்து பலாத்காரமாக ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றியது. இவ்வாறு பாசிசக் கட்சி அரசைக் கைப்பற்றியதும் முசோலினி மற்ற அரசியல் கட்சிகளையெல்லாம் ஒழித்துத் தமது சர்வாதிகாரத்தை நிறுவினார்.

பாசிச சர்வாதிகாரமுறை ஜனநாயகமுறைக்கும் குடியாட்சி முறைக்கும் முற்றும் முரணானது. இவ்வாட்சி முறையினால் அரசியலதிகாரம் முழுவதும் ஒரு தலைவனிடத்துக் குவிந்துவிடும். அத்தலைவனுடைய அதிகாரத்துக்கு வரம்பு கிடையாது. தான் விரும்பியபடியே அத்தலைவன் சட்டங்களை இயற்றி ஆட்சிமுறையை நடத்துவான். பாசிச ஆட்சிமுறையில் தனிச் சொத்துரிமை உண்டு. எனினும் கைத்தொழில்களும் வாணிபமும் சர்வாதிகாரியின் கட்டுப்பாட்டிற்கு அடங்கியே நடக்கும். ஒரே கட்சி, ஒரே கொடி, ஒரே தலைவன் என்பவை பாசிச ஆட்சியின் மற்றக் கொள்கைகள். மேலும் இவ்வாட்சிமுறை நாட்டுப் பெருமைக்கு முதலிடம் கொடுத்து மக்களின் கருத்து, வாழ்க்கை, தனியாள் தத்துவம் இவைகளை அசட்டைசெய்து அநேகமாக அழித்துவிடுகிறது. எல்லாம் சர்வாதிகாரிக்கு அடிமைப்படுகின்றன. இத்தாலியிற் தோன்றிய இவ்வாட்சி வெகுகாலம் நிலைத்திருக்கக் கூடாமல் இரண்டாம் உலகப்போரின் இறுதியில் நீக்கப்பட்டது.

(b) நாசிசம் (Nazism) முதல் உலகப்போரின்பின் ஜெர் மனி நாட்டில் வளர்ந்த தேசீய சோஸலிஸ்டு தொழிலாளர் கட்சி (National Socialist Party) சுருக்கமான முறையில் நாசிசக் கட்சி என்றழைக்கப்பட்டது. இக்கட்சி அரசியல் தேர்தலில் முனைந்து பெரும்பாலான வாக்குரிமைகள் பெற்று ஜெர்மன் குடி யரசில் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியது. 1933ம் ஆண்டில் இக் கட்சித் தலைவரான ஹிட்லர் பாராளுமன்றத்தையும் மற்றக் கட்சி களையும் ஒழித்து நாசிசக் கட்சியின் பெயரால் தமது சர்வாதி காரத்தை நிறுவினர். பின்னர் இவர் ஜெர்மனியிலுள்ள கம்யூ னிஸ்ட்டுகளின் சொத்துகளை அபகரித்து இனவெறி காட்டி யூதர் களை வேட்டையாடி ஜெர்மனியர் என்ற இனத்தவரின் சிறப்பை நிலைநாட்டுவதில் முனைந்தார். இக்கட்சியும் மக்களின் கருத்து, வாழ்க்கை, தனியாள் தத்துவம் ஆகியவற்றை ஒடுக்கி யாவற்றையும் அடிமைப்படுத்திற்று.

எனவே மக்களுரிமை எழும்பிவளரும் இந்நூற்றூண்டில் இக் கட்சியும் நீண்டநாள் நிலைக்கமுடியவில்லை. இரண்டாம் உலகப் போரோடு இதுவும் அழிந்து ஒழிந்தது.

6. பொதுஉடைமை கட்சியாட்சி (Communist rule.) இந்த ஆட்சிமுறை ஒரே கட்சியாட்சியை அடிப்படையாகக்கொண்டு கட்சி சர்வாதிகாரதோரணையில் (Party Dictatorship) அமைந் துள்ளது. எனவே ஜனநாயக ஆட்சிக்கும் குடியாட்சிக்கும் பொது உடைமை கட்சிபாட்சி முற்றிலும் முரண்பட்டது. பாசிச நாசிச ஆட்சிமுறைகளைப்போலவே இந்த ஆட்சிமுறையும் மக்களின் கருத்து, வாழ்க்கை, தனியாள் தத்துவம் இவற்றை ஒடுக்கி அடிமைப் படுத்துகிறது.

கார்ல்மார்க்ஸ், பிரெடிரிக் எங்கெல்ஸ் என்பவர்கள் 1848-ஆம் ஆண்டில் கம்யூனிஸக் கொள்கை விளக்கம் (communist mani-festo) என்ற அறிக்கையொன்றை வெளியிட்டனர் அதிலுள்ள சில சமூக பொருளாதார சமதர்மக் கொள்கைகளை அடிப்படை யாகக்கொண்டு உருசியாவிலுள்ள லெனின் என்பவர் ஒரு பொது உடைமைக் கட்சியை உருசியாவில் ஏற்படுத்தினர் 1917ம் ஆண் டில் உருசியாவில் நடந்த அரசியற் புரட்சியின் விளைவாக தொழி லாளர் கட்சியின் தலைவனை லெனின் ஆட்சிப் பொறுப்பைப் பலாத்காரமாகக் கைப்பற்றினர். உடனே அங்கு முடியாட்சி ஒழிக்கப்பட்டு பொது உடைமைக் கட்சி ஆட்சி ஏற்பட்டது. சாதாரண மக்களை எளிதிற் கவரும் கொள்கைகளை விளம்பரப்

படுத்தும் இக் கட்சியின் செல்வாக்கினால் சீனா முதலிய சில நாடுகளிலும் பொது உடைமைக் கட்சி ஆட்சி எற்பட்டு நடைபெற்று வருகிறது.

பொது உடைமைக் கட்சியின் முக்கிய இலட்சியம் முதலாளித்துவ ஆதிக்கத்தை சமூகத்தினின்றும் விலக்கி வேறுபாடற்ற ஓர் சுதந்திர சமுதாயத்தை (Classless Society) உண்டு பண்ணுவதே. இத்தகைய சமுதாயம் உருவாகும் வரை பொது உடைமைக் கட்சியின் சர்வாதிகார ஆட்சி நீடிக்கும். அச் சமுதாயம் உருவானபின் சர்வாதிகார ஆட்சியும் தானாகவே நீங்கிவிடும். மக்களுக்கு சுதந்திர நல்வாழ்வு தானாகக் கிட்டும். இவைகளும் பொது உடைமைக் கட்சியின் முக்கிய கொள்கைகளே. இவ்வித அரசாங்கமற்ற ஓர் சமூக அமைப்பு கற்பனை உலகிலே தவிர நடைமுறையில் சாத்தியமாகாதென்பது பலரின் கருத்து. எது எவ்வாறிருப்பினும் பொது உடைமைக் கட்சியாட்சி சர்வாதிகாரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது தெளிவு. எனவே மக்களின் உரிமையைப் பாதிக்கும் இக் கட்சியாட்சி உண்மையறிந்த மக்களை, சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் மக்களைக் கவர முடியவில்லை.

ஏழைப் பாமர மக்களை இலகுவில் மயக்கி விடுகிறது. அவர்களின் மிருக பலத்தைக் கொண்டே பலாத்காரமாகத் தன் செல்வாக்கைப் பரப்பிவருகிறது இக் கட்சி. கிறிஸ்தவ சமூகமும், கற்றுணர்ந்த நாடுகளும் பொது உடைமைக் கட்சியை உக்கிரமாக எதிர்த்து வருகின்றன. அடக்கு முறையே இக்கட்சியாட்சியின் வல்ல ஆயுதம். சர்வாதிகாரியின் கருத்துக்கு இசைந்து போகாதவர்களுக்கும் சந்தேகத்துக்கிடமாய் நடந்து கொள்பவர்கட்கும் அல்லது அதிகத் திறமை படைத்தவர்கட்கும் உடன் மரணமே முடிவு. ஆனால் விளம்பரப் படுத்தப்படும் இக்கட்சிக் கொள்கைகள் சில கிறிஸ்துவின் சிந்தைக்கு இசைந்தனவாகத் தோன்றுகின்றன. அதனால் ஏமாற்றமடைந்த கிறிஸ்தவர்களும் உண்டு. கிறிஸ்தவ போதனையில் மனிதனின் தனியாள் தத்துவம் ஒரு விலை மதிக்கப் படாத கடவுளின் ஈவு. இதையழிக்க முயலும் கட்சியின் செயல் எப்படி கிறிஸ்தவ நீதிக்குப் பொருந்தும்? மனிதன் நாட்டுக்கும் கட்சியாட்சிக்கும் அடிமையாகின்றான். மனிதன் அரசியலுக்கென்று உண்டாக்கப்படவில்லை. அரசியல்தான் மனிதனுக்கென்று உண்டாக்கப்பட்டது. இதை கம்யூனிஸக் கட்சி உணரவில்லை. அதுவே அதன் பெருங்குறை. அடக்கு முறையாலும் கட்டாயத்தினாலும் கம்யூனிஸ கட்சியாட்சியுள்ள நாடுகளில் பொருளாதார

முன்னேற்றம் அதி வேகமாகப் பெருமளவில் ஏற்பட்டுள்ளது உண்மையே. ஆயின் இதன் மூலமாக மக்களின் உண்மையான நல்வாழ்வு கிட்டும் என்பதற்கில்லை. மக்களின் உரிமைகளாகிய கருத்து வேறு பாட்டுரிமை, பேச்சுரிமை, சொத்துரிமை, கடவுள் வழிபாட்டுரிமை, சட்டத்தின் மூலம் நீதி பெறும் உரிமை ஆகிய வற்றை இக்கட்சி ஆட்சி கருவறுக்கின்றது. ஜனநாயக ஆட்சியோ இவற்றை முக்கியப்படுத்தி போற்றி வளர்க்க முயல்கின்றது. எனவே இம்மட்டும் உலகில் தோன்றியுள்ள முறைகளிலெல்லாம் ஜனநாயகக் குடியாட்சி முறையே மேலானது என்று கருதப்படு கிறது.

இப்படியாகப் பலவித ஆட்சி முறைகள் உலகில் தோன்றி ஒன்றும் மனிதனுக்கு முழுதிருப்தியை அளிக்க முடியாதிருந்த போதிலும் மனிதன் கடவுளாட்சியைப்பற்றி வேண்டிய சிந்தனை செய்ய மனதில்லாதிருக்கிறான் கடவுளும் மனிதன் தானாகவே தம்மை நாடி தமது அரசாட்சியை ஏற்றுக்கொள்ள வலிய வரும்படி விரும்பி காத்துக்கொண்டிருக்கிறார். பண்டைய இஸ்ரவேல் சனம் கண்டும் காணாமலும் கேட்டும் உணராமலும் போய் தங்கள் கேட்டின் வழியிலே கெட்டழிந்து போனதுபோலவே இன்றைய மனிதனும் சமூகமும் கேட்டின் வழிகளையே நோக்கி நிற்கின்றனர்.

பொது உடைமைக் கட்சிக் கொள்கையாகப் பிரகடனம் செய் திருக்கும் அரசாங்கமற்ற சமுதாயம் அவர்களது புதிய கற்பனை யல்ல அன்று ஏசாயா தீர்க்கன் முன்னறிவித்த நீதியுள்ள இரா சாவின் அரசாட்சியே அது. (ஏசாயா 11) "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை." தனி மனிதன் கடவுளின் ஆட்சியைத் தன் உள்ளத்திலேற்றுக் கொண்டு அவரிலன்பு கூர்ந்து அவர் கற்பனைகட்கு கீழ்படியத் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது சமூக அமைப்பில் ஓர் மாபெரும் மாறுதல் நிச்சயம் ஏற்படும். மனிதனின் உண்மையான நல்வாழ்விற் கான ஓர் சமூதாயம் உண்டாகும். அதில் மனிதரின் அல்லது கட்சிகளின் சுயநலமான ஆட்சிகள் தோன்ற முடியாது. ஒவ்வொரு வனும் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் நிலை நிச்சயம் ஏற்படும். உலக அலுவல்களைச் செய்யும்படி சமூக அமைப்பிலே தலைவர்கள் ஏற்பட்டாலும் அவர்கள் கடவுளின் தாசர்களாக — கடவுளின் ஆட்சியையே நிலைநாட்டுவோராக விளங்குவார்கள். இத்தகையதொரு சமுதாயம் தீர்க்கனின் வெறுங்கனவல்ல. கடவுளின் திருவுளத்தின் வெளிப்பாடு. எப் படியும் அது நிறைவேறித் தீரும். ஆனால் திடீரென சட்ட திட்டங்

களினால் ஏற்படும் ஓர் நிகழ்ச்சியல்ல. மெதுவாக மனித உள்ளங்களில் கடவுளருளால் ஏற்படும் மாறுதல்களின் மூலமாய் இச்சமுதாயம் உண்டாக்கப்படும். ஏசுக்கிறிஸ்துவும் பரலோக இராச்சியம் அல்லது தேவனுடைய இராச்சியம் என்னும் பதங்களினால் இப்படிப்பட்டவொரு சமுதாயத்தைப் பற்றியே போதித்தார். தன்னுடைய மனுடாவதாரத்தின் நோக்கமும் அதுவே என்றார் அவர் நீதியுள்ள இராசாவென்றும் யூதருக்கு இராசாவாகப் பிறந்தவரென்றும் அழைக்கப்பட்டார். மத்தேயு சுவிசேஷத்தில் 5-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பரலோக இராச்சிய குடிகட்கு இருக்கவேண்டிய பண்புகள் மெய்க் குடிமைப் பண்புகளாகும். இப்பண்புகள் அமைந்த குடிகளாலாக்கப்பட்ட ஓர் சமுதாயத்தில் மனித அதிகாரத்திற்கும் தண்டனைக்கும் சட்டத்திட்டத்திற்கும் அடக்குமுறைக்கும் இடமெங்கே?

இந்த நூற்றாண்டிற் தோன்றிய மகாத்மாகாந்தி என்ற பெரியார் கிறிஸ்துவின் போதனைகளை நன்கறிந்தவர். அவரும் இன்றைய சமுதாயத்தின் இழி நிலைக்குக் காரணம் சமூகத்தின் அடிப்படையமைப்பே என்று விளக்கிக் காட்டினார். தனி மனிதனின் உள்ளத்தில் சுயநலமும், பொருட்பற்றும், போட்டி மனப்பான்மையும் நிறைந்திருக்கும்போது எத்தகைய ஆட்சிமுறையும் கட்டுப்பாடும் சமூகத்தின் நல் வாழ்வைத் தாராது என்று திட்டமாகக் கூறியுள்ளார். அன்பின் அடிப்படையின்மேல் ஒத்துழைக்கும் மனப்பான்மையோடு கூடிய மக்கள் உண்டாகும் போது சமுதாயம் தானாகவே சீரடையும். அது ஒரு அரசாங்கமற்ற வேறுபாடற்ற நல்வாழ்வுச் சமுதாயம் ஆகும். அதை அவர் சர்வோதய சமுதாயம் என்றழைத்தார். உண்மையில் இஃது ஏசுகிறிஸ்து போதித்த பரலோக இராச்சியமே யொழிய வேறல்ல. வேறு பெயர் மட்டும் தான் சூட்டியிருக்கிறார்.

கிறிஸ்தவர்கள் இப்பெரிய உண்மையை இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டியவர்கள். மெய்மன மாறுதலடைந்து தங்கள் உள்ளத்திலே ஏசு இராசாவின் ஆளுகைக்கு இடங்கொடுக்க வேண்டும். முதலில் "உம்முடைய இராச்சியம் வருவதாக" என்ற செபத்தை சொல்லளவில் நிறுத்திவிடாதபடி உண்மையிலே தங்களில் அவர் இராச்சியம் வரத் தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். பின் புளித்த மாவைப்போல் தங்கள் உள்ளத்திலுள்ள அந்த அரசாட்சியை மற்றவர் உள்ளத்திலும் பரப்ப முயலவேண்டும். இதுதான் கடவுளின் ஆட்சி பரவும் முறை.

அத்தியாயம் 4

குடியாட்சியும் கிறிஸ்தவனும்

முன்னதிகாரத்தில் பலவித ஆட்சி முறைகளைப் பற்றியும் அதில் சனநாயக ஆட்சியே சிறந்தது என்றும் பார்த்தோம். ஆம்! மனிதன் உள்ளக்கிடக்கையை ஒருவாறு திருப்தி செய்யக்கூடியது அவ்வித ஆட்சி முறையே. மனித வரலாற்றில் இஃது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் இருந்து பலவிதமாக மனிதன் ஆட்சி முறைகளைக் கையாண்டு வந்தான். ஆட்சி முறை ஒன்றும் இல்லாத சமுதாயம் இருக்க முடியாது. அதே சமயத்தில் மனிதனின் உரிமை உணர்ச்சியும் தனி ஆள் தத்துவமும் தடையின்றிக் காப்பாற்றப்படவேண்டும். அப்படியானால் இவ்விரண்டிற்கும் ஓரளவு நிறைவளிக்கக்கூடிய மனித அரசு முறைகளில் குடியாட்சி முறைதான் தக்கது என்பது உண்மை. மற்றைய ஆட்சி முறைகளிற் பல அழிந்தொழிந்தன. மற்றும் சில பலமாக எதிர்க்கப்பட்டு வருகின்றன. பரிசுத்த வேதாகமத்திலும் மக்கள் ஒருவிதக் குடியாட்சி முறையையே தங்கட்குள் அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. ஒரு மனிதன் தன் விருப்பப்படி பிற மனிதரை அடக்கியாள்வது கடவுளின் திருவுளமல்ல; அல்லது சிலர் பலரை அல்லது ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை அடக்கியாள்வதும் கடவுளின் விருப்பமல்ல. அதைத்தான் சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலமாக இஸ்ரவேல் சனங்களுக்கு வெளிப்படுத்தினார்.

கிறிஸ்தவர்கள் இந்த உண்மையை உணர்ந்தவர்களாய் குடியாட்சி முறை நன்கு நடைபெற உதவி செய்யவேண்டும். ஒருவேளை கடவுளின் ஆட்சி இக்கருவியின் மூலமாக உலகில் நிறுவப்படலாம். அதற்கென்று கிறிஸ்தவர்கள் உழைக்கவேண்டும். குடியாட்சி முறையில் மக்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும், பிரயோகிக்கவும் போதிய வாய்ப்பு உண்டு. ஆளும் கட்சியை அமைப்பது மக்களின் பொறுப்பே. ஒவ்வொரு மனிதனுக்கும் ஓட்டுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இது மனிதனின் விலை மதிக்கப்படாத ஒரு சொத்து. இதைப் பயன்படுத்துவதில் மனிதன், அதிலும் கிறிஸ்தவன், அதிகக் கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். நிர்வாகத்தை நடத்தும் பிரதிநிதிகளை மக்கள் தாங்களே தெரிந்து கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளனர். மற்றெந்த எண்ணத்தையும் தள்ளி சமூக நல்வாழ்வையே கருத்திற்கொண்டு தக்க பிரதிநிதிகளைத் தெரிந்து கொண்டால் நிர்வாகம் நன்முறையில்

கடைபெறும். இன்றைய சமுதாயத்தில் மேலான உரிமை பெற்ற மக்கள் தங்கள் கடமையையும் பொறுப்பையும் உணராமலும் சிந்திக்காமலும் இழிவான ஆதாயத்தை இச்சித்து, நேர்மைக்காக பாடுபட அஞ்சி, அசட்டையாகத் தங்கள் வாக்குரிமையைப் பயன் படுத்துவதாலேயே ஆட்சிக் குழுவில் தகுதியற்ற மக்கள் நுழைந்து விடுகின்றனர். ஆகவே ஆட்சி கெட்டுப் போவது மக்களின் தவறே யன்றி குடியாட்சி முறையின் தவறல்ல. கிறிஸ்தவர்கள் இதில் மற்றவர்கட்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்தவ சமுதாயம் இதில் எவ்வளவு பின் தங்கி — என் அதி கேவலமான நிலைமையை அடைந்திருக்கிறது என்று துக்கத்துடன் ஒத்துக்கொள்ளவேண்டும். திருச்சபை ஆளுகை முறையே சனநாயகக் குடியாட்சி அடிப்படையின் மேல் அமைக்கப்பட்டது. சபைத் தேர்தல்களிலும், சபை நிர்வாகத்திலும் காணப்படும் ஊழல் கள் தான் எத்தனை அனந்தம்? இதற்கெல்லாம் காரணம் ஆளுகை முறையின் தவறல்ல — மனிதரின் பொறுப்பற்ற தன்மையே. கிறிஸ்தவரல்லாத மக்கள் கூடத் திருச்சபையை எளனம் செய்யக் கூடிய நிலை வந்துவிட்டது. ஆகவே கிறிஸ்தவர்கள் சபை ஆளுகை யிலும் நாட்டு ஆட்சியிலும் தங்கள் தனிப்பொறுப்பை உணர்ந்து நிறைவேற்ற வேண்டும். இதில் தவறுவோர் நிச்சயம் கடவுளுக்குக் கணக்குக் கொடுககவேண்டும்.

சிலர் சமூகத்தின் ஊழல்களைப்பற்றி எடுத்துப்பேசி அதைத் திருத்த முடியாதெனச் சாதித்து விடுகின்றனர். ஊழலான சமுதாயத்தில் தாங்கள் கலந்துகொள்ள முடியாதென்று சொல்லி ஒதுங்கிக் கொள்ள முயலுகின்றனர். ஆனால் இது முடியாத காரியம். இப்படிப்பட்டவர்கள் தங்கள் கடமையினின்றும தப்பிக் கொள்ள முயலுவோரென்றே சொல்ல வேண்டும். ஆகவே தேர் தல்களில் தங்கள் வாக்குரிமையைப் பயன் படுத்தாமல் இருந்து கொள்வோர் பெருந் தவறு இழைக்கிறார்கள். தைரியமாக நல்ல மக்களை அபேட்சகராக நிறுத்தி அவர்கட்குத் தங்கள் வாக்குகளை அளிக்கவேண்டியது கிறிஸ்தவர்தம் பெருங்கடமை. பணமோ, பதவியோ, பயமோ இக்கடமையுணர்ச்சியை மழுக்கிப்போட இடங் கொடுத்தல் கூடாது. முதலாவதாக சபை ஆளுகைத் தேர்தல் களில் இதைச் சாதித்துக் காட்டவேண்டும். பின்னால் நாட்டு ஆளுகைத் தேர்தல்களிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டும்.

பிரதிநிதிகளைத் தெரிந்து கொள்வதில் தங்கள் உரிமையை யும், கடமையையும் கிறிஸ்தவர்கள் உணர்ந்து கொள்வது மட்டும்

போதாது. ஆளுகைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதிலும் கிறிஸ்தவர்கள் பெரும பங்கு கொள்ளவேண்டும். சபை ஆளுகையில் கடவுட்குத் தங்களை யொப்புக் கொடுத்த மக்கள் முன்வந்து பொறுப்பேற்று நடத்த வேண்டும். அப்போதுதான் கடவுளாட்சி நடைபெற ஏதுவாயிருக்கும். நாட்டாட்சியிலும் கிறிஸ்தவர்கள் பின்தங்கக் கூடாது. சிறப்பாக இந்தியா நாட்டில் கிறிஸ்தவர்களின் தொகை வெகு குறைவாக இருந்த போதிலும் ஆற்றல் படைத்த கிறிஸ்தவர்கள் முன்வந்து ஆளுகைப் பொறுப்பை ஏற்க வேண்டும். கடவுளின் அருளை நம்பி தேர்தலுக்கு நின்றால் உண்மையிலே கடவுளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து எவ்விதத்திலும் குற்றமற்ற அன்பு நிறைந்த வாழ்க்கை நடத்தும் மக்கள் வெற்றி பெறுதல் நிச்சயம். அப்பொழுது கிறிஸ்துவின் இராச்சியம் பரவுவதற்கும் அது ஏதுவாகும். உண்மைக் கிறிஸ்தவனொருவன் அதிகாரத்தை மற்றவரைவிட நல்ல முறையில் பயன் படுத்துவது திண்ணம். அவனுடைய நடத்தையைப் பார்த்து பொதுமக்கள் அவன்மீது அதிகப்பற்றும் மதிப்பும் கொள்வர். மேலும் அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களைச் சமூகம் நாடித்தேடும். அப்படிப்பட்ட நிலையை உண்டாக்கிக்கொள்வது கிறிஸ்தவர்களின் கடமை. எனவே குடியாட்சி முறையில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் பொறுப்பை உணர்ந்து வாழ வேண்டியது அவசியம்.

திருச்சபையாக சமூக ஆட்சியிலும் சேவையிலும் கிறிஸ்தவர்கள் போதிய அளவு ஈடுபடவில்லை என்பது ஜான். சி. பெனற் என்பவர் சமீப காலத்தில் புத்தக வாயிலாக வெளியிட்ட கருத்து. முற்காலத்தில் அரசியலில் தலையிடுவதே பாவம் என்று கிறிஸ்தவர்கள் எண்ணினார்கள். இக்காலத்திலும் அப்படி எண்ணுபவர்கள் உண்டு. அப்படி எண்ணி வாளா விருப்பதுதான் பெரும் பாவம். சமூக வாழ்க்கையும் ஆட்சி முறைகளும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவை என்பது வேதப்போதனை. அப்படியிருக்க கிறிஸ்து சபை சமூக ஆளுகையிலிருந்து ஒதுங்கி கொண்டால் ஆளுகையில் கிறிஸ்துவின் சிந்தை எப்படி நுழைய முடியும்? தேவனுடைய இராச்சிய வருகைக்கும் தாமதம் ஏற்படும். ஆகவே சபையாக கிறிஸ்தவர்கள் சமூக ஆட்சியில் அதிகப் பங்கு கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டு மக்களின் நல்வாழ்வுக்கென உழைக்கும்படி கிறிஸ்தவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

அத்தியாயம் 5

கல்வி

மனிதன் சமூகத்தில் தான் நடந்துகொள்ளவேண்டிய விதத்தை அறிந்து அதன்படி ஒழுகப் பயிலுவதுதான் கல்வி. மேல் நாட்டுக்கல்வி நிபுணரான John Dewey என்பவர் கல்வியை வரையறுத்துக் கூறிய இலக்கணம் இதுவே. எனவே சமூக வாழ்க்கைக்கு மனிதனைத் தகுதியுள்ளவனாக்க கல்வி அவசியம்.

சமூக விதிகளையும் சட்டங்களையும் அறிந்து கொள்வது மட்டும் கல்வி யறிவு அல்ல. அந்த அறிவினால் ஒருவன் சமூகத்தில் வாழும் தகுதிபெற முடியாது. உதாரணமாக சாலையில் நடக்கும்பொழுது இடதுபுறமாக நடக்கவேண்டுமென்பது அநேகருக்குத் தெரியும். ஆனால் தெரிந்தவர்கள் கூட அடிக்கடி இவ் விதியை மீறுகிறார்கள். காரணம் என்னவென்றால் அந்த நேரத்தில் அவர்கள் அதை நினைப்பதில்லை. அடிக்கடி நம்முடைய செயல்கள் நம்முடைய உடன் யோசனையின்படி நடைபெறுவதில்லை. சில பழக்க வழக்கங்களின் படியே நாம் நடந்துகொள்கிறோம். ஆகவே சமூகத்தில் மனிதன் நடந்துகொள்ளவேண்டிய விதமும் அவனுக்குப் பழக்க வழக்கம் ஆகிவிடவேண்டும். அப்படி ஏற்படும் பழக்கங்களின் தொகுதி தான் அவன் பண்பு ஆகும். எனவே குடிமைப் பண்பு என்பது மீண்டும், மீண்டும் சமூகத்தில் அவனால் செய்யப்படும் நல்ல செய்கைகளால் மனிதனில் ஏற்படும் நற் பழக்க வழக்கங்களின் தொகுதியே.

பழக்க வழக்கம் ஏற்படும் காலம் இளமையே. அப் பருவத்தில் அமையும் வழக்கங்களைப் பின்னால் மாற்றுவது அரிது. ஆகையால் இளமையிலேயே நற்குடிப் பழக்கங்கள் ஏற்படுமாறு மக்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும். இதுவே கல்வியின் நோக்கம். ஜனநாயகக் குடியாட்சி பெற்ற சமூகத்தில் ஒவ்வொருவனும் பொறுப்புள்ளவன். இப்பொறுப்பை சரிவர நிறைவேற்ற கல்வி அவசியம். ஒவ்வொரு மனிதனும் கல்வி பெற்றிருக்க வேண்டும். கல்வியில்லாத பல மக்களைக்கொண்ட சமூகம் முன்னேற முடியாது. கட்டாயமாக யாவருக்கும் கல்வி அளிக்கப் படவேண்டும். இளைஞர்களுக்கு தக்க கல்வி அளிக்கும் பொறுப்பு சமூகத்தைச் சார்ந்தது. ஏனென்றால் இன்றைய சிறுவன்தான் பிற்றைய குடி ஆகிறான். அவன்தான் ஆட்சிப்பொறுப்பையும் ஏற்க வேண்டியவன். இந்தப் பொறுப்புணர்ச்சி சமூகத்துக்கு

வசியம். குழந்தைகளை அசட்டைசெய்து அவர்களைப் பயிற்றுக்காத சமூகம் தனக்கே குழிதோண்டுகிறது. சில நாடுகளில் தை நன்குணர்ந்து குழந்தை வளர்ப்பிலும், கல்வியிலும் அதிகக் வனத்தையும் பொருளையும் செலவு செய்கின்றனர். உருசியா, ஜர்மனி முதலிய சர்வாதிகார நாடுகளில் ஆளும் கட்சியின் கொள் கைகளை சிறுவர் உள்ளத்தில் கட்டாயமாக ஊட்டி அவர்களை அக் கொள்கைகட்கு அடிமைகளாக்கிவிடுகின்றனர். கிரேக்க நாட்டில் அத்தேனே பட்டணம் தனியாட்சி பெற்றிருந்த காலத்தில் அம் மக்கள் இக் கடமையை மேலான முறையில் நிறைவேற்றி வந்தனர். அவர்கள் ஆட்சியும் நல்ல முறையில் இயங்கி ஜன நாயகம் முழு சித்திபெற்றது என்று சொல்லக்கூடிய நிலையில் இருந்தது. ஒவ்வொரு குழந்தையும் 18 வயதுவரை ஒரு இலட்சியத்துடன் கவனமாகப் பழக்கப்பட்டது. பின் தன் நகரத்தின் நல்வாழ்வுக்காக தான் உழைக்க ஒரு உறுதிமொழி கொடுக்கவேண்டும். நகர ஆட்சியிலும் ஒவ்வொருவனும் முறைப் படி ஈடுபடவேண்டும் நகர ஆட்சிமன்ற அறையின் வாசலில் தங்க எழுத்துக்களால் பின்வரும் வார்த்தைகள் பொறிக்கப்பட்டி ருந்தன. "எங்கள் நகரம் அழகாயிருக்கவேண்டும் என்ற காட்சியை எங்கள் தலைமுறைக்குத் தாரும்; ஒருவனும் மற்ற வர்களைச் சுரண்டாதிருக்கும் நீதி எங்கள் நகரத்திற்கு வேண்டும்; துன்மார்க்கமும், வறுமையும் தலைகாட்டாதபடி எங்கும் செழிப் புள்ள நகரமாக வேண்டும்; சகோதர அன்பு நிலவி சேவை, பெருந்தன்மை முதலியவைகளே மதிக்கப்படவேண்டும்; நகரி லுள்ள யாவர் மேலும் அன்பு என்னும் அடிப்படையின்மேல் வளரும் சமாதானம் நிறைந்திருக்க வேண்டும். எங்கள் நகரம் பொது நல்வாழ்வுக்குத் தாயாக விளங்க வேண்டும்." இந்த மேலான இலட்சியம் இளைஞரின் மனதில் நன்கு பதியும்படி மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்பட்டது. தக்க கல்வியின் மூல மாகவே குடியாட்சிமுறை சித்தி பெறக் கூடும் என்பதை கிரேக்கர் நிரூபித்துக் காட்டினர். மலேயா நாட்டில் தலைமயிர் கத்தரிக்கும் கூடங்களில் நாவிதர் மக்களுக்கு நற்குடிப் பண்புகளைப் புகட்ட வேண்டும் என்பது அந்நாட்டு மக்கள் எடுத்துக்கொண்ட ஒரு முயற்சி. இப்படியாக பல நாடுகளிலும் குடிமைப்பயிற்சி கொடுக்க ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் இப்பயிற்சிகளில் ஈடுபடுவோர் நோக்கத்தை தவறவிடாமல் நல்ல முறையில் அப்பயிற்சி அளிக்க வேண்டும். இந்திய நாட்டிலும் கூட குடியாட்சி வந்த பின் இப் பயிற்சி வற்புறுத்தப்பட்டது. பள்ளிகளில் குடிமைப் பயிற்சியே முதல் நோக்கமாயிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. பாடத் திட்டத்திலும் அதற்கு கட்டாய இடம் கொடுக்கப்பட்டது. ஆனால்

கல்வித்துறை அதிகாரிகளும், ஆசிரியர்களும், பொதுமக்களும் இ பயிற்சிக்கு வேண்டிய முக்கியத்துவம் அளிக்காத படியால் அ எட்டுச் சுரைக்காயாகவே இருந்து வருகிறது.

சமூக நல்வாழ்வுக்கு கல்வி அவசியமாதலால் கிறிஸ்தவர்க இதில் அதிகமாக ஈடுபட வேண்டும். கல்வியைப் பரப்புவதில் கிறிஸ் தவ சங்கங்கள் தொன்று தொட்டு செய்து வந்திருக்கும் சேவை உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இப்பொழுது மற்றவர்களும் அதில் முனைந்து கிறிஸ்தவர்களைவிட அதிகம் செய்ய வேண்டு மென்று முயலுகிறார்கள். இதனால் கிறிஸ்தவர்கள் விழித்து தங் கள் முயற்சியை அதிகப்படுத்த வேண்டும. முதலாவதாக ஒவ் வொரு கிறிஸ்தவனும தன் பிள்ளைகளுக்கும், ஒவ்வொரு சபையும் தன் சபையின் மக்களுக்கும் கட்டாயக் கல்விவசதி செய்யவேண்டும். கல்வியில்லா கிறிஸ்தவனே இருக்கக் கூடாது. அடுத்தபடியாக மற்ற மக்களுக்கும் கல்வி புகட்ட கிறிஸ்தவ சபைகள் முன்வர வேண்டும். இத் துறையில் தற்கால சபைகள் ஓரளவு ஈடுபட்டுத்தான் வரு கின்றன. ஆனால் இன்னும் அதிகமாக ஈடுபடவேண்டும். மேலும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கல்வி புகட்டும் ஆசிரியர்களாக அமையவேண்டும். கிறிஸ்துவின் இராச்சிய விருத்திக்கு உதவி செய் யும் வாய்ப்புகளில் முக்கியமானதொன்றாகும் இது. இளம் வயதி லேயே பிள்ளைகளின் உள்ளத்தில் விதைக்கப்படும் நல்ல கருத்துக் கள் அவர்கள் பிறகால வாழ்க்கையில் நல்ல பலனைத் தரும். ஆனால் கல்வித்துறையில் ஈடுபடும் கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும். மற்றவர்களைப் போல வெறும் சம்பளத்துக்காக மட்டும் அல்லது வேறு உலக வசதிகளுக்காக மட்டும் அதில் ஈடுபட்டால் கிறிஸ்தவர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற முடியாது. அது கடவுளின் வேலை என்ற உணர்ச்சி வேண்டும். "இப்பிள்ளையை எனக்காக வளர்த்திடு" என்று கட வுள் ஒவ்வொரு கிறிஸ்தவ ஆசிரியனுக்கும் கட்டளையிடுகிறார். இக்கடமை உணர்ச்சி இல்லாத கிறிஸ்தவ ஆசிரியர்கள் சமூகத்துக் கும் திருச்சபைக்கும் பயன்பட முடியாது.

மேலும் கல்வி முறைகளில் பல திருத்தங்களும் மாறுதல் களும் அவ்வப்போது செய்யப்பட்டு வருகின்றன பொதுவாக மாறுதலை எதிர்ப்பது மனித சுபாவம். ஆனால் கிறிஸ்தவன் இதில் வித்தியாசமாக நடந்துகொள்ள வேண்டும் நாளுக்குநாள் வளர வேண்டியதும் வளரச்செய்ய வேண்டியதும் அவன் கடமை. கல்வி முறையில் எவ்வித மாறுதல் செய்யப்பட்ட போதிலும் கல்வியின் மேலான நோக்கத்தை மனதில்கொண்டு கிறிஸ்தவ ஆசிரியரும்,

கல்வித்துறையில் ஈடுபடும் கிறிஸ்தவர்களும் ஒழுக வேண்டும். அதாவது நற்சமூக வாழ்க்கைக்கு மக்களை ஆயத்தப்படுத்துதல்தான் கல்வி முறையின் நோக்கமாயும் அமைதல் வேண்டும். ஆகவே கிறிஸ்தவ ஆசிரியர்கள் கடமையுணர்ச்சி உள்ளவர்களாக கல்வித் துறையில் ஈடுபடும் போது சமூகம் அவர்களால் நன்மை அடையும். இயேசு கிறிஸ்து சிறந்த முன் மாதிரியான ஆசிரியர் என்பதை மறந்துவிடக்கூடாது. அதை மற்றவர்களுக்கும் எடுத்துக் காட்ட வேண்டும். அவருடைய பின்னடியார் அவரைப் போன்ற ஆசிரியராய்த் திகழ வேண்டுவது எத்துணை அவசியம்? கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புதிய இடங்களுக்குச் சுமந்து சென்ற மிஷனெரிகள் கல்வியில் எவ்வளவு ஈடுபட்டனர், எம்முறையில் கல்வி புகட்டினர் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். இக்காலக் கிறிஸ்தவர்களும் அப்படியே செய்தல் வேண்டும். மற்ற ஆசிரியர்கட்கும், மாணவர்கட்க்கும் கிறிஸ்தவ ஆசிரியர்களும், மாணவர்களும் வழி காட்டிகளாயிருக்கவேண்டும். அதிகாரிகளைப் பிரியப்படுத்த மட்டும் வேலை செய்யும் ஆசிரியன் கிறிஸ்தவ ஆசிரியன் அல்ல. அப்படியே அதிகாரிகளை அல்லது பொதுமக்களை அல்லது மாணவரைப் பிரியப்படுத்த தன் இலட்சியத்தை விட்டுக்கொடுக்கும் பள்ளி கிறிஸ்தவப் பள்ளி அல்ல. ஏனைய பள்ளிகளில் காணப்படும் ஏமாற்றங்கள், கள்ளக் கணக்குகள், பொய்யான வருகைப் பதிவுகள் முதலியன கிறிஸ்தவப் பள்ளிகளில் தலை காட்டலாகாது. கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமென்ற உணர்ச்சியோடு கிறிஸ்தவப் பள்ளிகளும், ஆசிரியர்களும் நடந்து கொள்ளவேண்டும். எல்லாத்துறைகளிலும் கிறிஸ்தவப் பள்ளிகளும் ஆசிரியர்களும் மற்றவர்களைவிட மேலாகவே இருக்கவேண்டும். மற்ற மாணவரையும் சமூகத்தையும் தங்கள் திறமையாலும், நல்லொழுக்கத்தாலும் கவர்ந்து கொள்ளும் முறையில் கிறிஸ்தவப் பள்ளிகளும், ஆசிரியர்களும் பணியாற்றவேண்டும்.

அத்தியாயம் 6

சட்டமும் கட்டுப்பாடும்

தனியுரிமை பெற்ற மனிதன் சமூக வாழ்க்கையில் ஈடுபடும் போது தானாகவே தனது உரிமையைக் கட்டுப்படுத்த வேண்டியவனாகின்றான். ஏனென்றால் சமூக வாழ்க்கையில் பலருடைய உரிமைகளும் இடம் பெற வேண்டியதிருப்பதால் தனி மனிதன் முற்றிலும் தன் மனங்கொண்டபடி நடக்க இயலாது. அப்படி நடக்கத் தலைப்பட்டால் விபரீத விளைவுகள் ஏற்படும். மற்றவர்

கட்கும், தனக்கும் இக்கட்டை வருவித்துக் கொள்வான் அவ[ன்]. ஆகவே ஓரளவு கட்டுப்பாடு சமூகத்தில் அவசியமாகிறது. பி[றர்] உரிமைகளைப் பாதிக்கா வண்ணம் தன் உரிமைகளைப் பெற முய[ல] வேண்டும். அதற்காகச் சில சமயங்களில் தன் தனிப் போக்[கை] அவன் மாற்றியமைக்க அவசியம் ஏற்படும். இந்தக் கட்டு[ப்] பாட்டுக்கு ஒழுக்கம் அல்லது அடக்கம் (Discipline) என்[று] பெயர். அடக்கம் இருவகைப்படும். மனிதன் தன் இயல்பான நடத்தையைச் சமூக வாழ்விற்கிசையத் தானே கட்டுப்படுத்திக் கொள்வது ஒன்று. இது தன்னடக்கம் (Self Discipline) எனப் படும். ஆங்கிலத்தில் இப்பதத்தின் இயல்பான பொருள் அது தான். ஆனல் இராணுவ அடக்கம் (Military Discipline) என்ற மற்றொரு வகை அடக்கமும் உண்டு. சில சமயங்களில் இவ்வகை அடக்கமும் தேவைப்படுகிறது. பொதுவாக நற்குடிப் பண்புகளமைந்த தனி மனிதன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளுகிருன். சமூக விதிகட்குத் தானுகவே அடங்கி நடக் கிருன். அப்படிப்பட்ட மக்கள் இன்றைய சமூகத்தில் வெகு சிலரே தான். இவர்கள் கடவுளின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர் கள். சமூகத்திலுள்ள மக்கள் யாவரும் இந்நிலையடைந்துவிட்டால் வெளிக்கட்டுப்பாடாகிய இராணுவ அடக்கத்திற்கு அவசியம் ஏற்படாது. ஆயின் சமூக விரோதமான செயல்களைச் செய்து பிறர் உரிமைகளைப் பறித்து மற்றவர்கட்கு இடையூறு விளைவிக்கும் மக்கள் பலரிருப்பதால் இராணுவ அடக்கம் அவசியம் ஆகிறது.

மனிதனின் தனி உரிமை மிக முக்கியமென்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. சுயாதீனம் யாவருக்கும் இயற்கையாக வுள்ள உரிமை. ஆனல் சுயாதீனமென்ருல் தன் மனம் போல கட்டுவரம்பின்றி நடப்பதல்ல. மற்றவனுக்கு அடிமைப்படாது மற்றவன் சொற்படி செய்யாமல் தானுகவே தன் செயலை நடத்து வதுதான் உண்மையான சுயாதீனம். இந்த உண்மையைப் பெரும்பாலான மக்கள் உணரவில்லை. சிறப்பாக புதிதாக அரசியல் விடுதலைபெற்ற நம் நாட்டில் இன்னும் மயக்க நிலையி லேயே மக்கள் இருக்கின்றனர். சுயாதீனமென்ருல் சுயேச்சை என்றெண்ணுகின்றனர். விடுதலை பெற்ருேமென்று கூறி இன்னும் அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர். தங்கள் சுபாவ இயல்புகட்கும் இன உணர்ச்சிகட்கும் அடிமைகளாக வாழ்கின்றனர். இவற்றினின்றும் விடுதலை பெறுவதுதான் சுதந் திரம். மகாத்மா காந்தியும் இதை வலியுறுத்திக்கூறியுள்ளார். காவலர் கட்டுப்பாடு (Police) பூட்டின வீடு, வழக்கு மன்றம் இவை இல்லாத சமூகமே முழு விடுதலை பெற்ற சமூகம் என்ருர். இந்த

லை எல்லாச் சமுதாயங்களின் இலட்சியமாயிருக்கவேண்டும். இது
ளிதில் சில நாட்களில் அடையக்கூடிய நிலை அல்ல. என்றாலும்
ந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதில் ஓர் தீர்மானமும், துவக்
மும், முயற்சியும் வேண்டும். வெளியடக்குமுறை நீண்ட காலப்
பலன் தராது. அது மேலும்மேலும் மக்களின் அடிமை மனப்பான்
மையைத் தான் வளர்க்கும். பயத்திற்கும், தண்டனைக்கும், அதிகாரி
ட்கும் மனிதன் அடிமைப்படுகிறான். ஆகவே இவ்விதக் கட்டுப்
பாட்டைக் கூடியமட்டுமொழித்து தன்னடக்கமாகிய கட்டுப்பாட்
டை மக்களில் வளர்க்க சமூகம் வழி தேடவேண்டும்.

கிறிஸ்தவர்கள் இந்த முயற்சியில் சமூகத்தின் வழிகாட்டிகளா
யிருக்கவேண்டும். நாம் முன் பார்த்தபடி கிறிஸ்தவன் பிறனுடன்
பழகும் விதத்தைக் கட்டுப்படுத்துவது கடவுள்மீது அவனுக்குள்ள
அன்பே. இந்த அன்புப் பிரமாணத்தால் கட்டப்பட்ட கிறிஸ்தவன்
தானாகவே சமூக ஒழுக்க விதிகட்குட்பட்டு நடக்கின்றான். இது
அடிமைத்தனமல்ல. பழைய ஏற்பாட்டின் காலத்து மக்கள் இதனை
முற்றிலுமுணராமல் நியாயப் பிரமாணத்திற்கு அடிமைகளாக
இருந்தனர். ஆனால் அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை
கொடுத்து அன்புப் பிரமாணத்தை நிலைநாட்டவே கிறிஸ்து உலகில்
தோன்றினார். நியாயப் பிரமாணம் பூரணப்படுத்தப்பட்டது.
கலாத்தியர் நிருபத்தில் பரி. பவுல் இந்த விடுதலையை நன்கு விளக்கு
கிறார் மேலும் இந்தப் புதிய அன்புப் பிரமாணத்தை சுயாதீனப்
பிரமாணமென்று பரி. பவுல் அழைக்கிறார். அந்தப் பதம்
முரண் தோற்றமுடைய பதம். ஆழ்ந்த கருத்துடையது சிறந்த
உண்மையைக் காட்டும். சுயாதீனமும், கட்டுப்பாடும் ஒன்றுக்
கொன்று முரணல்ல. இரண்டும் ஒன்றையொன்று தழுவி
நிற்கும் இரட்டையம்சங்கள் என்பது தெளிவாகிறது. கடவுள்
மனிதனுக்குச் சுயசித்தத்தை (Free will) சொந்தமாகக்
கொடுத்துள்ளார். அவர் அதைக் கட்டாயப்படுத்துவதில்லை.
ஆனால் மனிதன் தன் சுயமாகவே கடவுளின் ஆட்சியை தன்
உள்ளத்தில் எற்று அவரது கற்பனைகளின்படி நடக்கத் தன்னை
ஒப்புக்கொடுக்க அவர் விரும்புகிறார். அப்படிப்பட்டவனே பர
லோக இராச்சியக் குடியாகிறான். இதுவே மெய்ச் சுயாதீனமாகும்.
இப்படிப்பட்ட ஓர் நிலையை எல்லா கிறிஸ்தவர்களும் முதலிலடைய
வேண்டும். மற்றவர்கட்கும் இந்நிலையை அடைய உதவவேண்டும்.

சில வேளைகளில் சமூக ஆட்சிக்குழுவிலிருப்பவர்கள்
சமூகப் பொது நலனுக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் நடந்து
கொள்ளலாம். அப்பொழுது அதற்கு எதிர்ப்பு ஏற்படுகிறது.

குடியாட்சி முறையில் இத்தகைய பிரச்சனைகளைத் தீர்க்க மேல முறைகள் உண்டு. சட்டசபைகளில் எதிர்த்துத் தவறுகளைத் லாம். அல்லது வேறு தக்க மக்களைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை நடத்தலாம். ஆனால் இக்காலத்தில் எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தம் முதலிய நிறுத்தங்கள் வெகு சாதாரணமாகிவிட்டன. ஒத்துழையாமை இயக்கமும் சிலவிடங்களில் காணப்படுகின்றது. இது குடியாட்சி முறையிலிடம் பெறக்கூடாது. இதனால் சமு முன்னேற்றம் தடைபடுகிறது. மேலும் சில வகுப்பினர் தங்களுரிமைகளை அதிகமாகப் பாராட்டுகிறார்கள். அதற்கென்று போராடுவதே அவர்களின் முக்கியத் தொழிலாகவிருக்கிறது. இவர்கள் தங்கள் கடமைகளையும், பிறருடைய உரிமைகளையும் சிறிதும் உணர்வதில்லை. பெரும்பாலும் இப்போராட்டங்களும், எதிர்ப்புகளும் முழுவதும் நல்நோக்கத்தோடு தூண்டப்படுவதில்லை. கிறிஸ்தவர்கள் இவைகளினின்றுந் தங்களை விலக்கிக் காத்துக் கொள்ளவேண்டும். ஒத்துழையாமையும், முறுமுறுப்பும், நிறுத்தங்களும் கடவுளுக்கு ஏற்காத பாவங்கள். அப்படியானால் தவறான காரியங்கட்கு உடன்படுவதா என்ற கேள்வி எழும். அதற்குப் பதில் 'இல்லை' யென்பதே. இம்முறைகளால் குற்றத்தை எப்படி நீக்க முடியும்? சரியான சனநாயக முறைகளால் மட்டுமே குறைகளை நீக்க முடியும். அப்படி நீக்க முடியாவிடினும் பொறுமையாக அடங்கி நடக்கவேண்டும் என்பதே வேதபோதனை. இயேசுவினிடத்தில் கேள்வி கேட்ட யூதருக்கு அவர் சொன்னது "இராயனுடையதை இராயனுக்குச் செலுத்துங்கள்" என்பதே. எந்த அதிகாரமும் தேவனால் உண்டானது. அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவ நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான். ஆகவே அதிகாரத்திற்கு அடங்கி நடக்கவேண்டும் என்பது ஆதிச் சபையில் மறுபடியும் மறுபடியும் கிறிஸ்தவர்கட்குக் கொடுக்கப்பட்ட கட்டளை (ரோமர் 13:1—7. 1பேதுரு 2:13—15 பார்க்க). மேலும் அதிகாரிகளை நியமிக்கும் கடவுள் அதிகாரிகளை எடுத்துப் போடவும் வல்லவர். அநீதி நேரிடும்போது ஊக்கமான ஜெபத்தினால் கடவுளிடம் நீதி பெறலாம். அநீதியுள்ள ஆட்சிமுறையின் கீழிருப்பதால் ஒருவன் கெட்டுப்போக அவசியமில்லை. இராயனுடையதை இராயனுக்குக் கொடுக்கும்போதே தேவனுடையதைத் தேவனுக்குக் கொடுக்கலாம். இயேசுவானவரின் காலத்தில் உரோம ஆட்சிக்கு விரோதமாகக் கலகம் செய்யவிருந்த யூதரை அவர் கண்டித்தார். இக்காலத்திலும் கிறிஸ்தவர்கள் இவ்விஷயத்தில் அதிகக் கவனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். எந்த ஆட்சிமுறைக்கும் விரோதமான கலகங்களிலோ, குழப்பங்களிலோ அவர்கள் ஈடுபடக் கூடாது. நியாயத்தை எடுத்துச் சொல்லி மற்றதைக் கடவுளின்

காரத்தில் விட்டுவிடவேண்டும். கிறிஸ்தவர்கட்கென்று தனிச் சலுகைகள் கேட்பதோ, அவற்றிற்காகப் போராடுவதோ கூடாது. ஆனால் கடவுள் தம் பிள்ளைகளின் தேவைகளை அறிந்து அவற்றைக் கொடுப்பார் என்ற நம்பிக்கையுடன் அவர் மீது தங்கள் பாரத்தை வைத்துவிடவேண்டும்.

தற்காலத்தில் உலகநாடுகள் எல்லாவற்றிலுமே ஒழுக்கமும், கட்டுப்பாடும், வெகு குறைவாகக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் சுயாதீனத்தைப்பற்றி மக்கள் கொண்டிருக்கும் தவறான கருத்துத்தான். உரிமைகளை அதிகமாக வற்புறுத்தி வருவதும் கிடைக்காவிட்டால் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு பொதுமக்களின் அமைதியைக் குலைப்பதும் வெகு சாதாரணமாகிவிட்டது. கூட்டங்களில் யாதொரு கட்டுப்பாடுமின்றி ஒழுங்கீனமாக நடந்துகொள்ளும் மக்கள் அநேகர். எவ்விதப் பொது விதியையும் மீறி நடப்பது ஒரு திறமை என்று கருதப்படுகிறது. அதிலும் சிறப்பாகக் கல்லூரி மாணவர்கள் பற்பல சமயங்களில் நடந்துகொள்ளும் முறை விவரிக்க முடியாதது. கட்சி வேறுபாடுகளில் முறை தவறிப் பலாத்காரமாகப் பிற கட்சிகளைத் தாக்கும் சம்பவங்கள் பல. இரயிலில் கட்டணம் செலுத்தாது பயணம் செய்வதும், அதைக் கேட்கும் அதிகாரிகளைத் திட்டி அடிக்கப்போவதும் அடிக்கடி நிகழும் ஓர் காட்சி. பிறர் பொருளையும், பொதுச் சொத்துக்களையும் எடுத்துக் கொள்வதும், அழிப்பதும் ஒரு வீரச்செயல் என எண்ணப்படுகிறது. பெண்களிடம் பொது இடங்களிற் கூட ஒழுக்கந் தவறி நடந்துகொள்ளும் வாலிபர் பலர். கட்டுப்பாட்டை அமுல் நடத்தும் காவல் இலாகாவிலுள்ளவர்கள் கூட யாதொரு கட்டுப்பாடுமின்றி நடந்துகொள்வதும் இக்காலப் போக்கு. ஓர் விதமாய்ச் சொல்ல வேண்டுமானால் காட்டரசாட்சி (Law of the Jungle) மீண்டும் நாகரீகம்படைத்த மக்களிடம் நிலவிவருகிறது. இப்படிப்பட்ட காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் கட்டுப்பாடுடைய வாழ்க்கையாலும் முன்மாதிரியாலும் மற்றவர்களை நல்வழிப்படுத்தவேண்டும். சில சமயங்களில் கட்டுப்பாடற்ற மக்களைக் கண்டித்துத் திருத்துவதும் அவர்தம் கடமையே. இதைப்பற்றி நிர்விசாரமாயிருப்பது கிறிஸ்தவ தர்மத்திற்கு ஒவ்வாது.

அத்தியாயம் 7

சுக வாழ்வு

ஆரோக்கியம் அல்லது தேக சுகம் மனிதனுக்கு அருளப்பட்ட ஓர் பெரிய ஈவு. உடல் ஆரோக்கிய மிழந்து போகும்போது மனிதன் உலக வாழ்க்கையின்மேல் வெறுப்பு கொள்கிறான். அவன் வாழ்க்கை இன்பமாயிருக்க தேக ஆரோக்கியம் மிகவும் அவசியம். மேலும் மனிதன் சமூகத்தில் வாழும்போது அவன் தேகாரோக்கியத்தினவசியம் இரட்டிக்கின்றது. ஆரோக்கிய மற்ற ஒருவன் தன் வாழ்க்கை இன்பத்தை இழந்து போவதோடு சமூகத்தில் பிறருக்கும் பாரமாக அல்லது இடையூறு செய்பவனாக மாறுகிறான். எனவே தனி மனிதனின் ஆரோக்கிய நிலை சமூகத்தின் நல்வாழ்வைப் பாதிக்கும். நல்ல உணவுப் பழக்கங்களினாலும் தேகாப்பியாசத்தாலும் சுகாதார விதிகளை அனுசரிப்பதாலும் மனிதன் தன் ஆரோக்கிய நிலையைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இயற்கை விதிகளை மீறி நடந்து பலர் உடல் நலனைக் கெடுத்துக் கொள்கின்றனர். போதிய வசதிகள் இல்லாததாலும் பலரின் ஆரோக்கிய நிலை கெடுகிறது. ஒவ்வொரு மனிதனும் நற் சுகத்துடன் வாழ சமூகம் ஆவன செய்ய வேண்டும்.

சமூகத்தின் ஆரோக்கியநிலை தனி மனிதனின் ஆரோக்கிய நிலையைப் பாதிக்கும். சமூகத்தில் தொற்றுநோய் உண்டாகும் பொழுது அது பரவித் தனி மனிதர்களைத் தாக்குகிறது. சமூகத்தில் ஒரு மனிதனின் நோய் அவனுடன் நின்றுவிடுவதில்லை. ஆகையால் சமூகத்தில் சுகாதாரமான வசதிகள் செய்யப்பட வேண்டும். இதைச் செய்யத் தவறும் சமுதாயம் நிச்சயம் பாதிக்கப்படும். காற்றோட்டமான வீடுகளை அமைப்பது, பொது இடங்களைச் சுத்தமாய் வைத்திருப்பது, கழிவுப் பொருட்களை அகற்ற ஏற்பாடு செய்வது, நோய்கட்குக் காரணமானவற்றை அகற்றுவது, உணவுப் பண்டங்கள் நல்ல முறையில் விநியோகிக்கப்பட உதவி செய்வது, தொற்று நோயுள்ளவர்களைத் தனிப் படுத்தி வைத்தல் முதலிய யாவும் ஒரு சமூகத்தின் கடமைகள். அதற்கு வேண்டிய வசதிகளையும் அதிகாரிகளையும் ஏற்படுத்த வேண்டும். பொதுச் சுகாதாரம் பேணப்படுவதில் சமுதாயத்திலுள்ள மக்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை.

பொது ஆரோக்கியத்தைக் கவனியாமல் தனி மனிதன் ஒருவன் தான் மட்டிலும் ஆரோக்கியமாயிருத்தல் கூடும் என்றெண்ணுவது மடமை. சமூக வாழ்வில் அது சாத்தியப்

டாது. இவ்வளவு வசதிகள் இருந்தும் மக்கள் நோய்வாய்ப்படுத ும் உண்டு. விபத்துக்களின் மூலம் நோயாளிகள் ஆவதும் உண்டு. யது சென்றவர்கள் உடல் நலக் குறைவால் பீடிக்கப்படுவர். இவர்களைக் கவனித்து தக்க சிகிச்சைசெய்து அவர்கள் நோவைக் குறைத்து வாழ்க்கையை இன்பமாக்குவதும் சமூகத்தின் கடமையே. பெற்றோரின் உடல் நலக் குறைவால் சிசுக்கள் பாதிக்கப்படுவர். ஆகையால் சிசு சுகபரிபால வசதிகளும் அமைக்கப்படல் வேண்டும்.

இத்துறையில் கிறிஸ்தவர்களின் பொறுப்பு மிக அதிகம். மனிதன் நோய்வாய்ப்பட்டு அல்லலுறுவது கடவுளின் திருவுள மல்ல இயேசுக் கிறிஸ்து மனிதனாக வாழ்ந்த காலத்தில் சமூகத்தி லுள்ள மக்களின் மேல் பரிதாபப்பட்டு அவர்களின் நோய்களைக் குணமாக்கினார். தமது பின்னடியாருக்கும் நோய்களைக் குணமாக் கும் வரங்களை அளித்தார். அவரது அன்பினால் ஏவப்பட்டு அவ ருடைய பின்னடியார் அவரைப் போலவே இத்திவ்விய பணிவிடை யில் ஈடுபட்டனர். தீண்டப்படாத குட்டரோகிகள் தொடப் பட்டனர். சுகம் பெற்றனர். சயரோகத்தாற் பீடிக்கப்பட்டவர் கட்கு இரக்கமும் சிகிச்சையும் கிடைத்தன. பார்வை யிழந்தவர், சப்பாணிகள், செவிடுமையர் யாவருக்கும் தக்க சிகிச்சைகள் வழங்கப்பட்டன. சுகம் கிடைக்காதவர்கட்கு வாழ்க்கை இன்பமா யிருக்கும்படி பலவித வசதிகள் செய்யப்பட்டன. கண் பார்வை யிழந்தவர் கண் பார்வையை மீண்டும் பெறாவிடினும் வாழ்க்கை யின் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கத்தக்க உள்ளொளி பெற் றனர். இவையெல்லாம் கிறிஸ்துவின் சிந்தையை அணிந்த கிறிஸ் தவர்களின் சேவையே. பிற்காலத்தில் சமூகத்திலுள்ள மற்றவர் களும் அவர்களைப் பின்பற்றி இப்படிப்பட்ட பரோபகாரச் செயல் களில் ஈடுபட்டனர். மருந்துகளிலும் மருத்துவச் சிகிச்சை முறை களிலும் அதிவேகமான முன்னேற்றம் உண்டானது. ஏனென் றால் சமூக நல்வாழ்விற்கு ஆரோக்கியம் அத்தியாவசியமென்று எண்ணப்பட்டது. இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் இத்துறையில் பின் தங்கக் கூடாது. முன்னிலும் பன்மடங்கதிகமாக உழைக்க வேண்டும்.

ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் பல அம்சங்கள் உண்டு. முதலாவது உணவு விதிகள் அனுசரிக்கப்படவேண்டும். உணவின் அளவு, உணவின் தன்மை, உண்ணப்படும் வேளை, உண்ணும் முறை கள் இவைகளைப்பற்றி விஞ்ஞானிகளால் ஆராய்ந்து கண்டுபிடிக்கப் பட்ட விதிகளை யாவரும் கடைப்பிடிக்கவேண்டும். சிறப்பாக

கிறிஸ்தவர்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்தி இவ்விதிகளைக் கைக்கொள்ளவேண்டும். சமூகத்திலுள்ள மற்றவர்களும் மொத்தமாகவோ தனியாகவோ உணவு விதிகளைக் கடைப்பிடிக்க அவர்கட்குப் போதிக்கவேண்டும். மிதமிஞ்சி உணவருந்துவது உடல் நலனுக்குக்கேடு விளைவிப்பதோடு பெருந்தீனியென்ற பாவமாகவும் மாறும். போதை தரும் வஸ்துக்களையும் புகையிலை, காப்பி போன்ற நச்சுப்பொருட்களையும் பயன்படுத்தித் தங்கள் உடல் நலனைக் குறைத்துக் கொள்ளக்கூடாது. கிறிஸ்தவர்கள் மற்றவர்களையும் இத் தீமையினின்றுங் காப்பாற்றவேண்டும். இரண்டாவதாக சுத்தமான வாழ்க்கை ஆரோக்கியத்திற்கு அடிப்படை என்பதை கிறிஸ்தவர்கள் உணர்வதோடு அதை மெய்ப்பித்துக்காட்டவேண்டும். சுபாவ இயல்புகளை ஒழுக்கந் தவறித் திருப்தி செய்ய முயலுவதால் தனி மக்கள் தங்கள் உடல் நலனைக் கெடுத்துக்கொள்வதோடு சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கின்றனர். இத்தகைய முறைகேடுகளை நீக்க, மக்களை அதிலிருந்து காப்பாற்ற சமூகம் ஏற்பாடு செய்யவேண்டும். சிறப்பாக கிறிஸ்தவர்கள் அதிலீடுபட்டு Vigilance சங்கங்களை நிறுவி மக்களை நன்னெறிப்படுத்த ஆவன செய்தல் வேண்டும். மூன்றாவதாகத் தொற்றுநோய்களால் சமூகம் பாதிக்கப்படாதிருக்க அவற்றிற்கு விரோதமாகப் போர் செய்ய வேண்டும். தொற்றுநோய்க் கிருமிகளை அழிப்பதிலும் பரவும் வாய்ப்புகளைக் குறைப்பதிலும் தொற்றுநோய் கண்டவரைத் தனிப்படுத்தி வைப்பதிலும் தடுப்பு முறைகளைக் கையாள்வதிலும் கிறிஸ்தவர்கள் அதிக ஊக்கம் காட்டவேண்டும். ஏனென்றால் நோயை நீக்குவது கடவுளின் திருப்பணி. இதுபற்றிய விஞ்ஞான அறிவையும் மருத்துவர்களின் பல ஆராய்ச்சிகளையும் எல்லாக் கிறிஸ்தவர்களும் அறிந்துகொள்ளவேண்டும்.

நான்காவதாக நோயாளிகட்கு சிகிச்சை செய்யும் மருத்துவ நிலையங்களை நிறுவவேண்டும். சமூக வாழ்க்கையில் மிக அவசியமான ஓர் ஏற்பாடு இது. தற்போது பல குழுவினரும் மருத்துவ சாலைகளை நிறுவி வந்தாலும் கிறிஸ்தவர்கள் இன்னும் அதிகமான மருத்துவ நிலையங்களை அமைக்கவேண்டும். தனியாள் பொருளாலும் உழைப்பாலும் மருத்துவ ஊழியத்தைத் தாங்கவேண்டும். நோய்களைப்பற்றி தக்க அறிவில்லாத மக்களுக்கு புத்திசொல்லி சிகிச்சைத் தலங்களுக்கு அவர்களை இட்டுச் செல்லலாம். மேலும் கிறிஸ்தவர்களில் ஆற்றலும் வசதியும் படைத்த மக்களில் அதிகமான பேர் மருத்துவப் பயிற்சி பெற்று வைத்தியராகப் பணியாற்றலாம்.

கிறிஸ்தவ வைத்தியர்கட்கு ஒரு சிறப்பான பொறுப்பு உண்டு. மற்றவர்களைப்போல சமயத்தைப் பயன்படுத்திப் பொருளைத் திரட்டிக்கொள்வது அவர்தம் குறிக்கோளாயிருத்தல் கூடாது. தியாக சிந்தையும் கிறிஸ்துவின் அன்பும் நிறைந்தவர்களாய் இப்பணியைச் செய்யவேண்டும். அவசியமானல் சிலருக்கு இலவசமாயும் செய்ய வேண்டும். நோயாளிகளிடம் கருணைகாட்டி அவர்கள் நோவைக் குறைப்பதே தங்கள் கடன் என்று உணரவேண்டும். மருத்துவ முறையிலும் மேலான திறமைகளைப் பெற முயலவேண்டும். ஆனல் இன்றைய சமூகத்தில் பெரும்பாலான வைத்தியர் தங்கள் பொருள் நிலையைப் பெருக்கிக்கொள்ளவே இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். கிறிஸ்தவ மருத்துவர்களும் அப்படிப்பட்டவர்களாக விளங்குவது மிகவும் வருந்தத்தக்க காரியம். அவர்கள் தங்கள் உக்கிராணப் பொறுப்பைக் குறித்துக் கடவுளிடம் கணக்குக் கொடுக்கும்போது யாது செய்வார்களோ அறியோம்.

மருத்துவ நிலையங்களிலும் கிறிஸ்தவ மருத்துவ நிலையங்கள் தனிச் சிறப்புப் பெற்றிருத்தல் வேண்டும். பொது மருத்துவ நிலையங்களைவிட நம் மருத்துவ நிலையங்கள் மேலானவையென்பது உண்மையே. ஆனல் அது நிறைவடையக்கூடிய ஓர் நிலையல்ல. நம் மருத்துவ நிலையங்கள் கிறிஸ்தவரல்லாதவர்களால் நடத்தப்படும் நிலையங்களைவிட மேலானதாயிருக்கவேண்டும். சிகிச்சை முறைகளிலும் வசதிகளிலும் மருந்து பயன்படுத்துவதிலும் எவ்விதக்குறையும் இருத்தலாகாது. நோயாளிகளிடம் அனுதாப சிந்தையோடும் உள்ளன்போடும் மருத்துவரும் மற்றவரும் நடந்துகொள்ளவேண்டும். வசதியற்ற மக்கட்கு இலவச சிகிச்சை செய்யப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நோயாளிகள் கடவுளின் அன்பை உணரவும் உடல் நோய் மட்டுமல்ல தங்கள் ஆன்ம நோயும் தீரத்தக்கதாக மனந்திரும்பிக் குணப்படவும் அவர்கள் வழிநடத்தப்பட வேண்டும். இவ்விதமாய் சமுதாயத்தில் சுக வாழ்வு உண்டாகக் கிறிஸ்தவர்கள் உழைக்கவேண்டும்.

அத்தியாயம் 8

நீதி

நீதி என்ற சொல்லின் பொருள் சற்று விரிவானது. சந்தர்ப்பத்திற்கேற்ப அதன் பொருளில் திரிபுகள் காணப்படும். ஆனல் பரிசுத்த வேதாகமத்தில் ஒரே முக்கியப் பொருளுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது மனிதன் மனிதனுடன் நடந்துகொள்ள

வேண்டிய கடவுளின் திருவுளத்திற்கேற்ற முறை என்பதுதான். சமூகத்தில் மனிதன் மற்ற மனிதருடன் கூடி வாழ்வதால் ஒருவன் பிறருடன் பலவிதமாகவும் பழகித்தான் ஆகவேண்டும். நாம் முன் பார்த்தபடி ஒவ்வொரு மனிதனும் தன் இயல்பூக்கங்களை திருப்தி செய்யவும், தன்னுரிமைகளைப் பெறவும் நாடுகிறான். இப்படி ஒவ்வொருவனும் நாடும்பொழுது ஒருவனின் செயல் மற்றவனைப் பாதிக்கும். அந்நிலையில் அவன் நடந்துகொள்ளவேண்டிய விதம் யாது? இதை அவன் வரையறுப்பது ஒருவிதமாயிருக்கும். பாதிக்கப்படுபவன் வரையறுப்பது மற்றொரு வகையாயிருக்கும், மூன்றாம் மனிதன் வரையறுப்பது வேறொரு வகையாயிருக்கும். இவற்றில் சமயங்களில் எல்லாமே தவறாயிருக்கலாம். சரியான முறை கடவுளுடைய திருவுளப்படி நடந்துகொள்வதே. அந்த முறையை அல்லது வழியை கடவுள் தமது பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். "உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பது தான் உரைகல். "மற்றவர்கள் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ அதையே நீயும் அவர்களுக்குச் செய்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மனிதன் மனிதனுடன் நடந்துகொள்ளவேண்டிய நீதியான முறையை இந்தத் துலாக் கோலால் சீர்தூக்கிப் பார்க்கலாம். அப்போஸ்தலன் இதை வேறு வகையாக வரையறுத்து, "கிறிஸ்துவின் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" என்றார். அதாவது ஒரு மனிதன் ஒரு செயலில் ஈடுபடும்பொழுது இயேசுக்கிறிஸ்து அதைச் செய்வதாக இருந்தால் எப்படிச் செய்வார் என்றெண்ணிப் பார்க்கவேண்டும். இந்த நீதி சாதாரணமாக பலவீன மனிதனால் சாதிக்கக்கூடாத ஓர் நிலை. இயல்புப்படி மனிதனில் தன்னலம் அல்லது முதன்மை யூக்கந் தான் தலையோங்கி நிற்கும். இந்த இயல்பை மேற்கொண்டு அவனைக் கட்டுப்படுத்தும் ஒரு மேலான சக்தியிருந்தாலொழிய அவன் செயல்கள் நீதி வழியிற் செல்ல முடியாது.

இன்றைய சமூகத்தில் அநீதி தாண்டவமாடுகிறது. மனிதன் மனிதனுடன் நீதி நேர்மையுடன் நடந்துகொள்வது கிடையாது. அதைப்பற்றி பெரும்பாலான மனிதர் சிந்திப்பதே கிடையாது. தன்னலம், இனப்பற்று முதலிய உணர்ச்சிகளின் வசத்தால் மனிதன் நீதியைப்பற்றி எண்ணமற்றுப்போனான். வலிமையே நியாயம் என்ற நிலைதான் எங்கும் அமுலிலுள்ளது. பிறர் உரிமைகளை சட்டைசெய்யாத சமூகத் துரோகிகள் எண்ணிறந்தபேருண்டு. இவர்கள் தாமாக நீதிவழியைத் தழுவாதபடியால் கட்டாயத்தினால் அவர்களை நீதி வழிப்படுத்த சமூகம் முயலுகிறது.

இப்படிப்பட்டவர்கட்காகத்தான் நீதி மன்றங்களும், காவலர் அதிகாரமும், சிறைச்சாலைகளும், தூக்குமேடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மனித சமூகம் ஏற்படுத்தியுள்ள இந்த நிலையங்களெல்லாம் முற்றிலும் நீதிநடைபெறச் சாதகமானவையென்று சொல்லமுடியாது. கடவுள் வரையறுத்த நீதிக்கு இவை அடிக்கடி முரண்படுகின்றன. எனினும் ஓரளவு மனிதன் தன்னுரிமைகளைப் பாதுகாக்க துணைபுரிகின்றன இவை. அப்படியில்லாவிட்டால் பலவீனன் வாழ்வதே அரிதாகிவிடும், காட்டில் பலவீன மிருகங்கள் செத்து அழிவதுபோல.

அன்பு என்பதைப்பற்றியும் மனித எண்ணம் அடிக்கடி தவறுகிறது. தப்பிதமான இரக்க உணர்ச்சியினால் அன்பு என்னும் பெயராலேயே மனிதன் தான் பிறனிடத்து [illegible]புகூராது போகிறான். எடுத்துக்காட்டாக தவறிநடக்கும் ஒருவனைக் கண்டித்து திருத்துவதிலோ அல்லது தண்டித்து தடுப்பதிலோ தற்காலிகமாக அவனுக்கு நேரிடக்கூடிய கஷ்டத்தை எண்ணி அவன்மீது மனமிளகி அவனை அப்படியே விட்டுவிட்டால் அவனது வாழ்க்கை கெட்டுப்போவதுடன் அவன் சமூகப் பகைவனாகவும் மாறுகிறான். ஆகவே அன்பு என்னும் அறத்தையும் கிறிஸ்துவின் சிந்தையென்ற அளவுகோலாலேயே அளந்து செய்ய வேண்டும். கருணையென்பது இன்றியமையாததாக இருந்த போதிலும் அது கட்டுப்பாட்டுடன் கலந்திருந்தால் மட்டுமே தனி மனிதனுக்கும், சமூகத்திற்கும் நன்மை ஏற்படும். 'சங்கீதக்காரன்' பல வசனங்களிலும் நீதி, கிருபை அல்லது இரக்கம் என்ற இரண்டையும் சேர்த்தே கூறுவதைப் பார்க்கலாம். மனிதன் குணப்படாதவரையில் நீதி மன்றங்களும், காவற்கூடங்களும் இருந்துதான் ஆகவேண்டும். ஆனால் கிறிஸ்தவர்கள் இந்நிலைமையிலேயே மன அமைதியோடிருக்கலாகாது. நீதி மன்றங்களும் தண்டனைகளும் இல்லாத இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவதில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் உண்மையோடும் ஊக்கத்தோடும் உழைத்தல் வேண்டும்.

ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. "நீதி மன்றங்களிலெல்லாம் நீதி வழங்கப்படுகிறதா?" என்பதே. இல்லை என்பதுதான் பதில். மனம் மாறாத சில மக்கள் நீதிமன்ற அலுவல்களை நடத்தும் பொழுது மெய்யான நீதியை அவர்களிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்? இங்கேதான் கிறிஸ்தவர்களின் பொறுப்பும் அவர்கட்கொரு வாய்ப்பும் உள்ளது. கடவுளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவர் நீதிபதியாகவும் நீதிமன்ற அலுவலராகவும் அமையும்

போது நீதிமன்றங்களில் மெய்யான நீதி வழங்கப்படும். இலஞ்சமும் அநீதியும் அங்கே தலைகாட்டயியலாது.

பிறனுக்கு நீதி செய்வதைப்பற்றி வேதம் வெகு கண்டிப்பாகக் கூறுகிறது. தன் பிறனுக்கு நீதி செய்யாதவன் கடவுளின் அருளைப் பெறமுடியாது என்று திட்டமாகப் பல வேத வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஒருவன் கடவுளிடத்தில் எவ்வளவு பக்தியுள்ளவனாய் நடந்துகொண்டாலும் பிறனுக்கு நீதி செய்யாதேபோனால் அவனது பக்தி வீணானது என்பதை பழைய ஏற்பாட்டில் ஏசாயாவும், ஆமோசும், புதிய ஏற்பாட்டில் யாக்கோபும் பலமாய்க் கண்டித்து உணர்த்தியுள்ளனர். இயேசுகிறிஸ்து தாமும் (மத்தேயு 7 : 21—29). மனிதன் கடவுளிடத்துப் பெறும் தீர்ப்பு பிறனுக்கு அவன் செய்த நீதியையே பொறுத்தது என்று விளக்கியுள்ளார். சிமியோன், அனனியா, கொர்நேலியு முதலான பக்தர்களைப்பற்றிச் சொல்லிய இடங்களில் "நீதியும் தேவபக்தியுமுள்ளவன்" என்றிருப்பதைப் பார்க்கலாம். மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய நீதியையே கிறிஸ்துமார்க்கம் அதிகமாக வற்புறுத்துகிறது. ஆகையால்தான் அதைச் சமூக சுவிசேஷம் (Social Gospel) என்று அழைக்கின்றனர்.

நீதி மன்றங்கள் குறைவுள்ள சமூகத்தில் இன்றியமையாதன என்று கண்டோம். பிறன் தனக்கு அநீதி செய்யும்பொழுது ஒருவன் நீதி தேடிக்கொள்ளும் இடம் அது. ஆனால் கிறிஸ்தவன் ஒருவன் தனக்கு அநீதி செய்யப்படும்பொழுது நீதி மன்றத்திற்குப் போகலாமா? பரிசுத்த பவுல் போகக்கூடாதென்கிறார். (1 கொரி. 6 : 1—10) கிறிஸ்தவன் சபையிலுள்ள மூப்பரைக் கொண்டே தன் சகோதரனுடன் தனக்குள்ள வழக்கைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவரல்லாதாரிடம் வழக்குத் தீர்க்கும்படி போகக்கூடாது. அப்படியே நீதி கிடைக்காவிடினும் அநீதியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இக்காலத்திலும் அது பொருத்தமான உபதேசமே. கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு பொது நீதி மன்றத்துக்குப்போவதும் பொய்ச்சான்றுகளைத் தேடுவதும் மிகவும் வெட்கமான காரியமே. ஆகவே கிறிஸ்தவனொருவன் தனக்கு ஒருவன் அநீதிவிளைவித்தால் அவனுக்குமன்னிப்பதும் அன்பினால் அவன் மனதைமாற்றி நீதியைப் பெறுதலுமே கிறிஸ்துவின் சிந்தை.

வழக்கறிஞர் சமூகத்தில் தேவையா? ஒரு இலட்சிய சமுதாயத்தில் தேவையில்லைதான். அநேகர் கல்வியறிவற்றவரும் சமூக விதிகளின் விளக்கங்களை அறியாதவருமாயிருந்து அநீதி செய்

வோரும் மிஞ்சியிருக்கும்போது சட்டங்களை நன்குயறிந்து ஒடுக்கப் பட்டோரின் நீதிக்காக மன்ருடும் வழக்கறிஞர்கள் இன்றியமை யாதவர்கள்தான். ஆனால் வழக்கறிஞர் வேலையும் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பானதொரு அலுவலே என்ற உணர்ச்சி வேண்டும். பேச்சுத் திறமையாலும், பொய்ச்சாட்சிகளைத் தேடிக்கொள்வதாலும், தர்க்கத்தினுல் மற்ற வரை மடங்கடிப்பதாலும் பெயர்பெற்ற வழக்குரைஞர் பலர் இக்காலத்திலுண்டு. அவர்களிடமே அநேகர் வழக்குகளைக் கொண்டுபோவது உண்மை. இப்படிப்பட்ட வழக்குரைஞர் சமயத் தைப் பயன்படுத்தி வழக்காடும் மக்களின் பகைமையை அதிக மாக்கி அவர்களின் பணத்தையே சுரண்டுகின்றனர். இவர்கள் சமூகத் துரோகிகளென்பதற்கையமில்லை. இத்துறையிலும் கிறிஸ்தவர்கட்கு ஒரு பொறுப்பு உண்டு. கிறிஸ்தவ வழக்குரைஞர் சமூகத்தில் மக்களிடையே நல்லுறவையும், சமாதானத் தையும், நீதியையும், நிலைநாட்ட முயலவேண்டும். "ஆபிரகாம் லிங்கன்" வழக்குரைஞராக இருந்தபோது செய்ததுபோன்று தங்க ளிடத்துவரும் வழக்காளிகளை சமாதானப்படுத்த வேண்டும். திட்டமாய் தவறுசெய்தவன் என்று தெரிந்தபின் அவனுக்காக வழக்காடுவது கிறிஸ்தவ அறமன்று. அவனுக்குதவிசெய்து அவனைக் குணப்படுத்தலாம்.

மனிதரில் தொழிலையொட்டியும் நிலையை யொட்டியும் பல வகுப்புகள் உள்ளன. இக்காலத்தில் தனிச்சண்டைகளைவிட வகுப்புச்சண்டைகளே மிகுதி. முதலாளிக்கும் தொழிலாளிக்கும், மாணவர்க்கும் ஆசிரியர்க்கும், எசமானனுக்கும் பணியாளுக்கும், கொள்பவனுக்கும் விற்பவனுக்கும் இடையே பலமான போட்டி ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஒவ்வொரு வகுப்பும் தன் உரிமைகளை மிகுதிப்படுத்திக் கேட்பதும் எதிர் வகுப்பு தனக்கு அநீதி இழைத்துள்ளதென்று எண்ணுவதுமே அலசிப்பார்த்தால் இரு வகுப்பினரிடத்தும் குறைகள் உண்டு. இரு வகுப்பாருடைய கோரிக்கைகளும் உண்மையாகவுமிருத்தல் கூடும். போட்டியிட்டு ஒரு வகுப்பை மற்ருெரு வகுப்பு வெறுப்பதால் நன்மை எதுவும் ஏற்படாது. சமூக நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் அது ஓர் பெரிய முட்டுக்கட்டை. இந்நிலையில் இப்பிரச்சனைகட்கு முடி வென்ன? தற்போது சமூகம பல முறைகளைக் கையாண்டும இப்பிரச்சனைகட்கு முடிவுகாணக் கூடவில்லை. மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகின்றன. சமூக வாழ்க்கையே அழிந்து விடும்போல் சமயங்களில் தோன்றுகிறது. ஆனால் புதிய ஏற்பாடு ஒரு நல்லவழி சொல்லுகிறது. "உன் கண்ணில் இருக்கிற உத்திரத்

தைப் பாராமல் பிறன் கண்ணில் இருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன ?" என்ற இயேசுவின் வாக்கை ஒவ்வொருவனும் நோக்க வேண்டும். ஒவ்வொருவனும் தன் பிழையை உணரும்போது பிறன் குற்றம் பெரிதாகத் தெரியாது. பரிசுத்த பவுல் அப்போஸ்தலனும் எபேசு சபையாருக்கு இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கும் வழியை விளக்கியுள்ளார் (எபேசியர் 6 : 1—9) அதன்படி ஒவ்வொருவனும் தனக்குமேலான எசமானன் ஒருவருக்குதான் கணக்குக் கொடுக்கவேண்டும் என்ற சிந்தையோடு எல்லாவற்றையும் செய்தால் இப்பிரச்சினைகள் எழ இடமே இராது. கிறிஸ்தவர்கள் அதில் மற்றவர்கட்கு வழிகாட்டியாக நடந்துகொள்ள வேண்டும். தொழிற்சங்கங்களிலும் மற்றும் சங்கங்களிலும் கிறிஸ்தவர்கள் முன்னணியில் நின்று நல்வழிகாட்டி தவறான போட்டிகளில் அச்சங்கங்கள் ஈடுபடாதவாறு தடுத்தல் வேண்டும்.

அத்தியாயம் 9

பொருளாதாரம்

" அருளில்லார்க் கவ்வுலக மில்லை ; பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு " என்ற குறள் இன்றைய சூழ்நிலையில் மிக உண்மையானதே. ஆனால் பொருளின் மதிப்பு அதிகமாக மிகைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக மனிதனின் வாழ்க்கைக்கு உதவியாக, அவனுக்கு அடிமையாக இருக்கவேண்டிய பொருள் அவனையே அடிமையாக்கி பொருளுக்கென வாழ்க்கை நடத்தும் மக்கள் பலரை உண்டாக்கிவிட்டது. என்றாலும் பொருளை நாம் முற்றிலும் அலட்சியம் செய்யமுடியாது. மனித வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும் பொருள் இன்றியமையாதது. அவனுக்கு உண்ண உணவு வேண்டும், உணவு தர நிலம் வேண்டும், ஆடுமாடுகள் வேண்டும், வசிக்க வீடு வேண்டும், அணிய ஆடை வேண்டும். இப்படிப்பட்ட பொருட்கள் எல்லா மக்களுடைய வாழ்விற்கும் ஆதாரமானவை. இப்பொருட்கள் வேண்டிய அளவு இருக்கும் நிலைக்குப் பொருளாதாரம் என்று பெயர். தனியாள் வாழ்விலும் பொருளாதாரம் சரியாகவிருந்தால் மட்டுமே அவன் தன் கடமையைச் செவ்வனே நிறைவேற்ற முடியும். வாழ்க்கையும் இன்பமாக அமையும். இதையே குறள் குறிப்பிடுகிறது.

சமூக வாழ்க்கையிலும் பொருளாதாரம் ஓர் முக்கிய அம்சம். சமூக வாழ்க்கையின் பல அம்சங்களும் பொருளாதாரம் என்ற

அடிப்படையின் மேலே சார்ந்து நிற்கின்றன. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் சமூகத்தில் தாராளமாய் கிடைக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனின் தேவைக்கும் தக்க அளவு பொருள் சமூகத்தில் கிடைப்பின் சச்சரவுக் கிடமில்லை. அப்படிக் கிடைக்காதபோழ்து போட்டியும் பஞ்சமும் ஏற்பட்டு, சமூக வாழ்வில் அமைதி குலைகின்றது. எனவே, தேவைக்குத் தக்க அளவு பொருட்களின் உற்பத்தியும் இருக்கவேண்டும். இது சமூகத்தின் பெரும் பொறுப்பு; மிகக் கடினமான பொறுப்பும் கூட. பொருளின் தேவையும் பொருள் கிடைக்கும் அளவும் சமமாக இருந்தால் சமூக வாழ்க்கை சுகமாக நடைபெறும். தேவைக்குத் தக்க அளவு பொருள் கிடைக்காவிட்டாலோ தேவைக்கு மிஞ்சி பொருள் கிடைத்தாலோ சங்கடம் ஏற்படும். இருநிலைகளிலும் சமூக வாழ்க்கை வெகுவாய் பாதிக்கப்படும். இந்த அடிப்படையான பிரச்சனையை யொட்டிப் பல சிக்கலான பிரச்சனைகளும் ஏற்படும். மனிதனின் மேலான பண்புகள் கூட பொருளாதார நிலை குலைவதால் கெட்டுவிடும். ஆன்மீக வாழ்வைக்கூட ஓரளவுக்குப் பொருளாதாரம் பாதிக்கின்றது. எனெனில் முற்றிலும் பொருட்பற்றற்ற முனிவர்கள் சமூகத்தில் அநேகமா யிருப்பதில்லை. ஆதித் திருச்சபையில் இதனாலேற்பட்ட தொல்லையொன்றுண்டு. சீஷர்கள் ஆண்டவரின் இரண்டாம் வருகை வெகு சீக்கிரத்தில் இருக்குமென்று எதிர் பார்த்திருந்தபடியால் ஜெபம் பண்ணுவதிலும், உபதேசிப்பதிலுமே தரித்திருந்தனர். உலகப் பொருட்களைப்பற்றிக் கவலையில்லை. தங்களுக்குண்டானதை யெல்லாம் விற்று அப்போஸ்தலர் பாதத்தில் வைத்து யாவற்றையும் பொதுவாய் பயன்படுத்தினர். ஆனால் அவர்களெதிர்பார்த்தபடி உடனே இரண்டாம் வருகை வராதபடியால் அவர்களுக்குள் பொருளினிமித்தம் சச்சரவு உண்டாயிற்று. எனவே பொருளாதாரம் சமூக வாழ்வின் அடிப்படை என்பது விளங்கும்

பொருளாதாரம் நல்லநிலையிலிருக்கச் சமூக மக்கள் யாவரும் நன்றாக உழைக்கவேண்டும். பொருட்களை உற்பத்தி செய்வதில் சமூகம் எதிர்பார்க்கும் அளவிற்கு அவனவன் தன்தன் துறையிலே உழைக்கவேண்டும். உற்பத்தி போதுமான அளவு இல்லாவிடில் பற்றாக்குறை ஏற்படும். அப்போது சமூகம் மட்டும் அல்ல தனி யாரும் இக்கட்டை அனுபவிக்கவேண்டும். இந்நிலையைத் தவிர்க்க வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் இந்த தன் கடமையை உணர்ந்து உழைக்கவேண்டும். "வேலை செய்ய மனதில்லாதவன் சாப்பிடலாகாது" என்பது வேதவாக்கு. பரிசுத்த பவுலப்போஸ்

தலன்கூட இவ்விஷயத்தில் சபையாருக்கு மாதிரியாக நடந்து கொண்டார். ஆவிக்குரிய வேலையில் ஈடுபட்டிருந்த அவருக்கு உடல்தேவைகளை அளிக்க மற்றவர்கட்குக் கடமையிருந்தபோதிலும் தானும் உழைக்கவேண்டும் என்று சொல்லி கூடாரம் செய்கிற தொழிலிலீடுபட்டார். உற்பத்திப் பெருக்கம் பல ஏதுக்களைச் சார்ந்தது. இயற்கை வசதி ஒரு முக்கியமான ஏது. சிலவிடங்களில் உள்ள இயற்கை வசதி வேறு சில விடங்களில் கிடைப்பதில்லை. மனிதனின் ஆக்கத்திறமை மற்றொரு ஏது. இதை சமயத்திற்கேற்றபடி பயன்படுத்துவதால் இயற்கை வசதிக் குறைவால் ஏற்படும் சங்கடத்தையும் மனிதன் மேற்கொள்ளக்கூடும். இவற்றை விட முக்கியமானது மனிதனின் உழைப்பு. சமூக வாழ்க்கை முன்னேறியுள்ள இக்காலத்தில் இவ்வெல்லா ஏதுக்களையும் சமூகம் பயன்படுத்துகின்றது. அனுபவத்தாலும் அறிவாலும் உற்பத்திப் பெருக்கத்துக்கான பல வழிகளை சமூகம் கண்டுபிடித்துள்ளது. அதிலொன்று தனிமனிதனின் உழைப்பைவிட ஒத்துழைப்பு மேலானதென்பதே. இவ்வித கூட்டுழைப்பு வாழ்க்கையின் பல துறைகளிலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. குறுகிய மனப்பான்மை படைத்த சிலர் சுயநல எண்ணத்தோடு கூட்டுழைப்பில் அதிகமாக கலந்துகொள்வதில்லை. கிறிஸ்தவர்கள் இவ்விஷயத்திலும் மற்றவர்கட்கு முன்மாதிரியாயிருக்கக் கடமைப்பட்டவர்கள். வேதாகமத்தில் கூட்டுழைப்பின் மேன்மையைப் பற்றிப் பலவிடங்களிற் பார்க்கிறோம். உற்பத்திப் பெருக்கத்திலும் கிறிஸ்தவர்கள் அதிக ஊக்கம் காட்டவேண்டும்.

பற்பல தொழில்களின் மூலமாகவும் சமூக வாழ்விற்குச் தேவையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எல்லாரும் ஒரேவிதத் தொழிலில் ஈடுபடுவதில்லை. இது சாத்திய மாகாது. ஏனென்றால் மக்களுடைய திறமையும் ஊக்கமும் ஆளுக்குஆள் வேறுபடுகின்றன. மேலும் எல்லாரும் ஒரே தொழிலைச் செய்தால் பலவிதப் பொருட்கள் கிடைப்பதெப்படி? எனவே நாகரீகமடைந்துள்ள சமூகத்தில் தொழில்களைப் பாகுபடுத்திச் செய்வதுதான் புத்தியான முறை. இப்படிச் செய்வதால் மக்கள் ஒருவரையொருவர் சார்ந்திருப்பது அதிகவலுவடைகிறது. ஒரு தொழில் பிறதொழில்களைவிட மேலானது அல்லாது கீழானது என்றெண்ணுவது தவறு. எல்லாத் தொழிலாளிகளும் சமமான கூட்டு உழைப்பாளிகள். இந்த உணர்ச்சி யாவரிடமும் காணப்படல் வேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும் சமூக வாழ்க்கையில் தான் இன்றியமையாத ஓர் அங்கம் என்றுணரவேண்டும். அதேகாலத்தில் பிறதொழிலாளிகளைக் குறைத்தோ

மிகைப்படுத்தியோ மதிக்கவும் கூடாது. தன் தொழில் சம்பந்தப்பட்டவரையில் சமூகவாழ்க்கையில் தனக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட பணி அது என்று கருதவேண்டும். எண்ணுவது மட்டுமல்ல அப்படியே உண்மையோடும் ஊக்கத்தோடும் நடக்கவேண்டும். இன்றைய சமூகத்தில் இதுவும் மோசமான நிலையில் உள்ளது. சோம்பல் மிகுதியாலும் மனச்சாட்சி மழுங்கிப் போனதாலும் மிச்சமான தொழிலாளிகள் தங்கள் தொழில்களில் உண்மையற்றவர்களாய் காணப்படுகின்றனர். ஏமாற்று வேலையும், பொய்யும், திருட்டும் எல்லாத் தொழில்களிலும் வெகு சாதாரணம். சில தொழிலாளிகளைப்பற்றி பழமொழிகள்கூடத் தோன்றிவிட்டன. இப்படிப்பட்டவர்கள் பிறர் பொருளைக் கவரும் திருடரை விட மோசமான சமூகத் துரோகிகள் என்பது மேல்நாட்டு அறிஞர் ஒருவரின் கருத்து. தனிமனிதன் மட்டுமல்ல, கூட்டுறவு சங்கங்களும் பெரிய ஆலைகளும்கூட இவ்வித வஞ்சனையிலும், ஏமாற்றுவதிலும் ஈடுபட்டுள்ளன. இதனால் தரமற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு சமூகத்தின் பொருளாதார நிலை குலைகிறது. உற்பத்திக் குறைவு இன்னொரு விளைவு. இந்நிலை மாற வேண்டும். இதிலும் கிறிஸ்தவர்கள்தான் வழிகாட்டிகளாக அமைய வேண்டும். கிறிஸ்தவன் எந்தத் தொழிலிலும் உண்மையோடு அயராது உழைப்பதால் தன் சமூகக் கடமையைச் சரிவர நிறைவேற்றுவதோடு பிறருக்கும் முன்மாதிரியாவான்.

தொழில் என்னும் பதம் இக்காலத்தில் குறுகலான பொருளுடன் பயன்படுத்தப்படுகின்றது. ஆலைகளில் அல்லது தனி இடங்களில் கடினமான உடலுழைப்புச் செய்பவர்கள் மட்டும் தொழிலாளிகள் என்பது தவறு. சமூக வாழ்க்கைக்கு அவசியமான பணிகளில் எதையொருவன் செய்தாலும் அவனும் தொழிலாளியே. இந்த எண்ணம் மேலோங்கி நின்றால் தொழில்களைப்பற்றிய தாரதம்மிய மதிப்பு மறையும். எத்தொழிலாயினும் அது தெய்வம் தந்த பணி யென்ற உணர்ச்சி மேலிட்டால் ஒரு தொழிலையும் ஒருவனும் கேவலமாக மதிக்க இடமிராது. இதற்காகத்தான் அறிஞர் பலர் கடின உடலுழைப்பு எல்லோராலும் ஓரளவாவது செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். சில சமூக சீர்திருத்தவாதிகள் இதற்கென சில திட்டங்களை அமுல் நடத்தி அதைச் செய்து காட்டுகின்றனர். கல்வித் துறையில் கூட இதை அடிப்படையாகக்கொண்டு பல மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. பெரிய தலைவர்கள் பிறருக்கு முன்மாதிரியாக தாழ்வாக எண்ணப்படும் பணிகளைச் செய்கின்றனர். இயேசுகிறிஸ்து தாமே தம்முடைய அடியார்களின் கால்களைக் கழுவினார். இந்திய நாட்டில் துணிந்து

சாதனைகள் காட்டியவர் காந்தியடிகள் ஆவர். அவர் துவக்கி வைத்த ஆதாரக் கல்வியும் தொழிலின் மேன்மையை முக்கியப் படுத்துகின்றது. இன்றும் ஆச்சிரமங்களில் தியாகிகள் பலர் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். கிறிஸ்தவர்கள் எத்தொழிலையும் அலட்சியம் செய்யாமல் மனமுவந்து ஏற்றுக் கொள்வது கிறிஸ்துவின் சிந்தையாகும்.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சமூகத்தில் ஒரு நாட்டிலேயே அல்லது கூட்டத்திலேயே செலவழிந்து போகலாம். சில சமயங்களில் ஓரிடத்து உற்பத்தியாகும் பொருட்கள் மற்றோரிடத்துக்கும் போகவேண்டியதிருக்கும். அப்போது ஒரு நாடு அல்லது கூட்டம் மற்றோரிடத்திலிருந்து உற்பத்தியான பொருட்களை வாங்க நேரிடும். இவ்வித வாணிபமும் பண்ட மாற்றும் முன்னேற்றமடைந்த சமூகத்தின் மற்றொரு அம்சம். சரியான சமூக உணர்ச்சி குறுகிய நோக்குடையதல்ல. தானிருக்கும் ஒரு கூட்டம் மட்டும் தன்னைச் சார்ந்தது, மற்றக் கூட்டங்கள் தனக்கடுத்தவை யென்று மனிதன் எண்ணக்கூடாது. அப்படி நினைப்பவன் பூரணமான சமூக உணர்ச்சியில்லாதவன். சமூகமானது எவ்விடத்திலிருந்தாலும் அது ஒன்றுதான் என்ற மேலான உணர்ச்சி வரும் போது ஓரிடத்திலுள்ளவர்கள் மற்றோரிடத்திலுள்ளவர்களை ஏமாற்றவோ, ஒடுக்கவோ, எத்தனிக்கமாட்டார்கள். ஆனால் இன்று இவ்வித உணர்ச்சி இல்லாததால் ஒரு நாட்டு மக்கள் மற்ற நாட்டு மக்களை ஏமாற்றுகின்றனர். சிறப்பாக வாணிபத்தில் வஞ்சனை அதிகம். சமீபத்தில் இந்திய நாட்டு வாணிபத்தைப்பற்றி உலகிலேயே ஓர் கெட்ட பெயர் ஏற்பட்டுவிட்டது. அதிக இலாபம் கருதி உற்பத்தியாளரும் வணிகரும் ஏமாற்றுத் தொழிலில் அதிகமாய் இறங்கிவிட்டனர். இவ்வித ஏமாற்றுதல் சமூக வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கைக்கே முரணானது. அதிலும் கிறிஸ்தவ வணிகரும் கிறிஸ்தவ நாடுகளும் இவ்விதக் கள்ள வாணிபத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது மன்னிக்கமுடியாத பாவம். ஒரு கற்பனையை யல்ல, பல கற்பனைகளை மீறிய பாவம் அது. ஆகவே கிறிஸ்தவர்கள் இதிலும் தங்கள் பொறுப்பை யுணர்ந்து உண்மையைக் காப்பாற்றுவார்களானால் சமூகத்திற்குப் பெரும் நன்மை ஏற்படும்.

சில நாடுகளில் அல்லது இடங்களில் அவ்விடத்து சமூகத்து மக்களின் தேவைக்கு அதிகமான அளவில் பொருள் உற்பத்தி செய்யப்பட்டால் விலைவாசி குறையாவண்ணம் உற்பத்திப்பொருட்களை அழித்துப்போடுகிறார்கள். வரலாற்றில் இப்படி சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதுவும் ஒரு பெரிய சமூக விரோதமான செயல்.

சமூகத்தைப்பற்றி பரந்த மனப்பான்மை தேவை. ஓரிடத்தில் இயற்கையின் அதிக செழிப்பால் தேவைக்கு மிஞ்சிய பொருள் உண்டானபோதிலும் இயற்கை வசதிக் குறைவால் பொருள் உற்பத்தி வேண்டிய அளவிற்குக் குறைவான இடங்களும் உண்டு. அதைப்பற்றி எனக்கு என்ன கவலை என்றிருக்கலாமோ. "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்று கேட்டான் காயீன். ஆம், அவன் காவலாளிதான். சமூக வாழ்க்கையில் இதுவும் ஒரு பொறுப்பு. எனவே குறுகிய மனப்பான்மையோடு ஒரு நாட்டு சமூகத்தைமட்டும் கவனித்து உலக சமூகத்தைப்பற்றி எண்ணமற்றிருக்கக்கூடாது. "உள்ளவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக் கடவன்". "இலவசமாய்ப் பெற்றீர்கள். இலவசமாய்க் கொடுங்கள்".

பொருள் மனித வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்கும் அவசியம்தான். ஆனாலும் பொருளின் மதிப்பை மிகைப்படுத்தி அதை நாடுவது கிறிஸ்தவ அறமல்ல. "தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்யக்கூடாது" என்று இயேசுகிறிஸ்து சொன்னபோது தேவனுடைய பிள்ளைகள் உலகப் பொருளைத் தேடக்கூடாது என்று போதிக்கவில்லை. அளவுமீறி உலகப் பொருளை நாடுவதுதான் "உலக சிநேகம்". இந்த 'உலக சிநேகம்' தான் தேவனுக்கு விரோதமான பகை. அதாவது பொருளை அதிகமாக சேர்க்கவேண்டும் என்றெண்ணி மற்றக் கடமைகளையும் கடவுளைப்பற்றிய நினைவையும் தள்ளிவிட்டு பொருள் ஈட்டுவதிலேயே எப்போதும் கண்ணுங்கருத்துமாயிருப்பவர்கள் பொருளுக்கு அடிமைப்படுகின்றனர். பொருளே அவர்கள் தெய்வம். எனவே அது ஒரு விக்கிரக ஆராதனை. பரிசுத்த பவுலும் கொலோசேயர் 3 : 5ல் "பொருளாசையாகிய விக்கிரக ஆராதனை" யென்று குறிப்பிடுகிறார். இப்படி நாட்டமுள்ளவர்கள், தேவ அன்பும், மனித அன்புமற்றவர்களாகி நித்திய ஜீவனை இழந்துவிடுகிறார்கள். ஆகையால் உலகப் பொருட்பற்று மனிதனையோ சமூகத்தையோ ஆண்டுவிடக்கூடாது. இன்றைய உலகம் இதில் தவறிவிட்டது. நாடுகளும் தனி மனிதரும் அதிகமான உலகப்பொருட்பற்றிலேயே (materialism) அமிழ்ந்து மேலான இலட்சியங்களை அசட்டை செய்கின்றனர். ஆகையால்தான் சமூக வாழ்க்கையில் பலவித ஊழல்கள் மலிந்து நல்வாழ்வு கிட்டாது போயிற்று. மக்கள் இப்பொழுதாகிலும் விழித்துக்கொண்டு பொருளாசையின் அடிமைத்தனத்தினின்று தங்களை மீட்டுக்கொண்டால் மட்டுமே உலகம் உய்ய வழி உண்டு. கிறிஸ்தவர்கள் சிறப்பாக இதனை உணர்ந்து தங்கள் உலக சிந்தையை உதறிவிட்டு எழுந்து வழி காட்டவேண்டும்.

அத்தியாயம் 10

இன்ப வாழ்க்கை

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்று கூறியுள்ளார் ஒரு பெரியார். வேறொன்றையும் அறியாதிருப்பது சரியென நாம் ஒப்புக்கொள்ள முடியாது ஆனல் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற ஆசை மிகவும் சரி. நல்லதுங்கூட. மனிதன் இன்பமாயிருக்க வேண்டும் என்ற நல் நோக்கத்துடன் கடவுள் வாழ்க்கையில் பல வசதிகளை வகுத்துள்ளார். இயற்கையழகு, பறவைகளின் பாடல், இளங்தென்றல், குடும்ப வாழ்க்கை, மழலைச் சொற்கள், மழலை விளையாட்டு, இசை, விளையாட்டுகள் இவை யாவும் மக்கட்குக் களிப்புண்டாக்கவே உண்டாக்கப்பட்டன. இவற்றால் அவன் இன்பம் நுகர்வது தவறல்ல. அது கடவுளின் திருவுளமே. ஆதியில் ஆதாமைப் படைத்த கடவுள் அவனை 'ஏதேன்' என்னும் இன்பத் தோட்டத்தில் தான் வைத்தார். அப்படியே சமூக வாழ்க்கையிலும் மக்கள் கூடி இன்பமடையும்படியாக பல ஏற்பாடுகள் உள்ளன. மனிதன் தான் மகிழ்ச்சியாயிருப்பதோடு பிறரையும் மகிழ்வித்தால்தான் அவன் சமூக வாழ்க்கைக்குத் தகுதியுள்ளவன். கூட்டு வாழ்க்கையில் உள்ள ஏற்பாடுகளால் இன்பமடையாதவன் பேதையே. அப்படியே தான்மட்டும் கூட்டு வாழ்க்கையின் இன்பங்களை நுகர்ந்துகொண்டு பிறரும் இன்புற்றிருக்க உதவி செய்யாதவன் சமூகத்திலிருக்க உரிமையற்றவன்.

இன்பமும், துன்பமும் வாழ்க்கையில் இணைந்தே வருவது சாதாரண அனுபவம். மேலான ஓர் நோக்கத்தோடு இரண்டையும் அவ்விதம் அமைத்துள்ளார் கடவுள். அவற்றில் ஒன்றையொட்டித்தான் மற்றதின் மதிப்பு நன்கு விளங்கும். ஆகவே வாழ்க்கையில் எப்பொழுதும் உழைத்து பாடுபட்டுக்கொண்டே இன்பத்தை அநுபவிக்காதிருப்பவன் முழு வாழ்க்கை நடத்தவில்லை யென்று சொல்லலாம். சிலர், சிறப்பாக கிறிஸ்தவர்களிற் சிலர், வாழ்க்கையிலின்பங்களை அநுபவிப்பதும் இன்பமாயிருப்பதும் பாவமென்றெண்ணுகின்றனர். வேதம் அதற்கு ஆதரவு தரவில்லை. சமூக ஏற்பாட்டிலுள்ள இன்பங்களை அடைவது கடவுளின் திருவுளமென்பதை வெளிப்படுத்தவே இயேசுகிறிஸ்து கானவூரில் நடந்த திருமணத்திற்குப் போய் அதை மேன்மைப்படுத்தினர். பெத்தானியா ஊரிலுள்ள விருந்துகளில் கலந்துகொண்டார். லாசருவின் குடும்பத்தோடு நட்புக் கொண்டார். எனவே இன்பம் பாவமல்ல. ஆனல் மக்களிற் பலர் தனியாகவும் சமூகமாகவும்

முன் சொன்ன இன்பங்களைத் தக்க முறையில் நுகராமல் மித மிஞ்சி அல்லது காலம், இடந் தவறி அல்லது தகாத வகையில் நுகரும்போது அதுவே பாவமாகும். இக்காரியத்தில் கிறிஸ்த வர்கள் தங்களைக் குற்றமறக் காத்துக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். பிறரை மகிழ்விக்க வேண்டும். ஆனால் ஆபத்துக்கு வழிநடத்தப்படாதபடி கவனமா யிருக்க வேண்டும். இந்தச் சோதனை மக்களை எளிதில் மேற் கொள்ளக்கூடியது. இன்பம் மக்களை இலகுவில் கவர்ந்து கொள்வ தால் தவறான இன்பங்கள்கூட அவர்களை எளிதில் மயக்கிவிடும். இக்காலத்தில் இப்பெரிய சோதனை பலரையும், ஏன் சமூகத்தை யுமே, மேற்கொண்டு தவறான வழியில் நடத்திச் செல்லுகிறது. மனிதன் உழைப்பினால் சோர்ந்து போயிருக்கும் போதும், மனக் கவலையுற்றிருக்கும் போதும், ஏதோ இன்பத்தை நாடி அதை மாற்றிக்கொள்ள முயல்வதற்குப் பதிலாக அநேகர் இன்பந்தரும் ஏதுக்களுக்கு தங்களை அடிமைப் படுத்திக்கொண்டனர். நாடகம், படக்காட்சி, பொருட்காட்சி, வேடிக்கை விளையாட்டுக்கள் இவற் றில் மிச்சமான நேரத்தை—ஏன் முழு நேரத்தையுங் கூடச் செல விடும் மக்கள் பலர். அருவருக்கப்படத்தக்க காட்சிகளையும், வீண் வம்புப் பேச்சுக்களையும், கேட்கத்தகாத சொற்களையும், இந்த ஏற்பாடுகளிற் புகுத்தி பல மக்கள் கெட்டுப் போவதற்கு ஏதுவாய் அவைகளை நடத்தும் மக்கள் சமூகத்திற்குத் தீங்கு செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் நன்னோக்கமல்ல. மனித பலவீனத்தைப் பயன்படுத்தி பணம் திரட்டும் பாதகர் அவர்கள்! மனதுக்கு இன்பத்தைக் காட்டி வாழ்க்கைப் பண்புகளைக் கெடுத்து விடுகின் றனர். இன்றைய சமூகம் இன்ப வெறிபிடித்து அலைகிறது என்று சொல்லுவது மிகையாகாது. வரலாற்றில் பண்டைய அரசுகள் பல மக்கள் இன்ப வெறியில் ஈடுபட்டதனாலேயே கெட்டழிந்து போயின. அதை அறிந்துங்கூட எச்சரிப்படையாத இந்த சமூகத் திற்கு அதை அழிவினின்று திருப்பும் தொண்டர்கள் தேவை. யார் அத்தொண்டினைச் செய்தல் கூடும்? கிறிஸ்தவர்கள்தான் என்பது சொல்லாமலே விளங்கும். பாவ உலகில் வாழ்ந்தும் தன்னைப் பாவ மற்றவராகக் காத்துக்கொண்ட இயேசுபெருமானின் அடியார்களே இதற்கு வேண்டிய ஆட்கள். இந்தப் பொறுப்பை கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

படக் காட்சிக்குப் போவது தவறா, தவறில்லையா என்ற பிரச் சனை பலரை வாட்டுகிறது. ஆனால் அது ஓர் பிரச்சனை யல்ல. அப்போஸ்தலன் மொழிந்ததுபோல ஒருவனின் விசுவாசம் பலமா யிருந்தால் படக்காட்சிக்குப் போவதனால் அவன் கெட்டுப்போவ

தில்லை. ஆனால் பலவீனனான மற்றொருவனுக்கு அவன் இடையூறு செய்கிறான். அவன் நன்மையை எண்ணி இவன் அதை விட்டுவிடவேண்டும் என்கிறார். ஆகவே எதுவும் பக்தி வளர்ச்சிக்கு ஏதுவாக அல்லது வாழ்க்கையின் நன்மைக்கு ஏதுவாக நடைபெறுமானால் அதில் தவறில்லை. இந்தத் துலாக் கோலைக்கொண்டுதான் தவறு தவறின்மையை முடிவுகட்டவேண்டும்.

பொதுவாக மக்கள் ஆழ்ந்து சிந்திப்பதில்லை. மனதைக் கவரும் எதற்கும் தங்கள் மனதைப் பறி கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே நாடகம், படக்காட்சிகளின்மூலம் கெட்ட எண்ணங்கள் மனதிற்றோன்றும்போது பல மக்கள் தங்கள் மனதைப் பறி கொடுத்துவிடுகின்றனர். இவற்றின் மூலமாக நல்ல நீதிகளைப் படிப்பிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மனித உள்ளத்தில் நல்லெண்ணங்களைவிட தீய எண்ணங்கள்தான் எளிதிலிடம்பெறும். இதுதான் இயல்பு. ஆகவே நன்னோக்கத்தோடு தயாரிக்கப்படும் இந்த இன்ப ஏற்பாடுகளின் மூலமாகச் சமூகத்தில் விளைந்துள்ள தீங்குகள்தான் மிகுதி. அண்மையில் புது டெல்லியில் கூடின இராச்சியக் காவலர் தலைவர்களின் மாநாட்டில் பம்பாய் இராச்சியத் தலைவர் ஒரு இரகசியத்தை வெளியிட்டார். இரயிலில் முதல் வகுப்பு வண்டிகளை ஓடும்போதே திறந்து பிரயாணிகளைக் கொள்ளையடிக்கும் ஒருவன் ஒத்துக்கொண்டது என்னவென்றால், ஒரு படக்காட்சியை ஏழு தடவைகள் பார்த்ததினால்தான் அத்தொழிலைக் கற்றுக்கொண்டான் என்பதே. இப்படி அநேக எடுத்துக்காட்டுகள் கூறலாம். எனவே இப்படிப்பட்ட இன்ப ஏற்பாடுகளைத் தூய்மைப்படுத்தாவிட்டால் சமூகத்தின் பிற்கால நிலை பயங்கரமாக மாறும். கேவலமான காட்சிகளைக் கண்டு விகடங்களைக் கேட்கும்படி ஏழை மக்களிற் பலர் தினமும் காட்சி சாலைக்குச் சென்று தங்கள் சொற்ப வருவாயைச் செலவிட்டு, பசியும், பட்டினியுமாய் காலங்கழிக்கின்றனர். எத்தனையோ இளம்பெண்கள், வாலிபருடைய மனது கெட்டு வாழ்க்கை பாழாகிறது. இவை யாவற்றையும் அறிந்தும் கிறிஸ்தவர்கள் வாளாவிருந்தால், அவர்கள் கணக்குக் கொடுக்கவேண்டும்.

முதலாவதாக இப்படிப்பட்ட தவறான இன்பப் பொழுது போக்குகளைக் கிறிஸ்தவர்கள் ஒதுக்கவேண்டும். பின் பிறருக்கு அறிவுரை கூறி அவர்களையும் நல்வழிப்படுத்தவேண்டும். தாங்கள் ஏற்பாடு செய்யும் இன்பப் பொழுதுபோக்குகளில் தீமையான எதுவும் நுழையாமற் காத்துக்கொள்ளவேண்டும். இக்காலத்தில் பள்ளிகளிற் கூட பாவமறியாத சிறு குழந்தைகளின் உள்ளங்களிலே

கெட்ட எண்ணங்கள் உருவாகத்தக்கதாகக் காதல் நாடகங்கள், குடிவெறிக் காட்சிகள், மனிதனை மயக்கும் நடனங்கள், நாட்டியங்கள், கொள்ளையடிக்கும் அல்லது திருடும் காட்சிகள், கொலைக் கட்டங்கள், ஏமாற்றும் சூழ்ச்சிகள் யாவும் நடித்துக் காட்டப்படுகின்றன. அவற்றை நடிக்கும்படி இளஞ்சிறுர்கள் பழக்கப்படுகிறுர்கள். இது சமூகத்துக்கு எவ்வளவு தீங்கு விளைவிக்கிறதென்று உணர்பவர் வெகு சிலரே. கிறிஸ்தவர்கள் இதிலும் வழிகாட்டிகளாக இருக்கவேண்டும். பாவக் கலப்பற்ற இன்பத்தையே நுகர்வதும் மற்றவர் நுகரச் செய்வதும் அவர்தம் கடமை.

அத்தியாயம் 11

சமூக சேவை

மக்கள் யாவரும் எல்லாவிதத்திலும் ஒன்றுபோல் இருப்பதில்லை. பலவித பண்புகள் கொண்டவர்களாயும் பலவித திறமைகள் பெற்றவராயும் இருக்கின்றனர். சிலருக்கு சிலகாரியங்களில் திறமை அதிகம். மற்றும் சிலருக்கு வேறு சில காரியங்களில் திறமை அதிகம். வாழ்க்கையிலும் இன்றைய சமூகம் எல்லாரும் சம நிலையில் இருக்கும்படி அமையவில்லை. ஏற்றத்தாழ்வுகள் உண்டு. வாழ்க்கை வசதிகள் பல இல்லாதவர்களும் உண்டு. ஆனல் எல்லாரும் வாழ்க்கையில் எல்லாவற்றையும் பெறவேண்டும் என்பது சமூகத்தின் நோக்கம். ஆகவே சமூக சேவை அவசியப்படுகிறது. அதாவது வசதியில்லாதவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதும் திறமையில்லாதவர்களுடைய காரியங்களை அவர்களுக்காக திறமையுள்ளவர்கள் செய்வதும் சமூக சேவை எனப்படும். இது ஒவ்வொரு மனிதன் மேலும் விழுந்த கடமை. தான் மட்டும் குறைவற்ற நிலைமையில் இருந்துகொண்டு மற்றவர்களைப் பற்றி எண்ணமற்றிருப்பது மனிதப் பண்பு அல்ல. அதிலும் சமூகத்தில் வாழும் மனிதனுக்கு ஏற்றதல்ல மனிதன் இயற்கையிலேயே கருணை உள்ளம் படைத்தவன். துயரத்தைக் கண்டால் கண்ணீர் சிந்துபவன். உடுக்கை இழந்தவன் கைபோல ஆபத்தில் பிறருக்கு உதவுபவன். அதிலும் சமூகத்தில் வாழும் அவன் பல துறைகளிலும் சமூகத்துக்கு கடன் பட்டவன். அவன் அனுபவிக்கும் அநேக வசதிகள் அவன் உழைப்பின் பலனல் அல்ல, ஆனல் மற்றும் பலரின் உழைப்பாலும் தியாகத்தாலும் அவனுக்குக் கிட்டியவை. அவன் நடாத தோட்டத்தின் பலனைப் புசிக்கிறுன். இந்தக் கடனை அவன் செலுத்தித் தீர்க்கவேண்டும். எப்படி?

தன்னைவிட வசதி குறைந்தவர்கட்கும் ஆற்றல் அற்றவர்கட்கும் இக்கட்டில் இருப்பவர்கரும் தன்னால் ஆன சேவை செய்வதால் அவன் தன் கடனைத் தீர்க்க முடியும்.

சமூக சேவையில் பல விதங்கள் உண்டு. ஏழைகட்கு உதவி செய்தல், நோயாளிகளைக் கவனித்தல், கல்வி யறிவில்லாத வர்கட்கு கற்றுக்கொடுத்தல், அனாதைகள், வயோதிகர், ஊனர் முதலியவர்களைப் பராமரித்தல், சுகாதார நிலையைக் காத்தல், சமூகத்தின் பொதுச் சொத்துக்களைப் பேணுதல், ஒழுங்கு நிலை நாட்டுதல் முதலியன சேவையில் சில வகைகள். இவைகளில் மனிதன் தனியாகவும் குழுவாகவும் ஈடு படலாம். ஆனால் என்ன நோக்கத்தோடு அதில் ஈடுபடுவது? தனக்கு ஏதோ ஒன்று கிடைக்கும் என்று எண்ணி அல்லது பிறர் புகழை நாடி அல்லது உதவி பெறுபவரை வசப்படுத்த அல்லது கட்டாயத்திற்காக இவற்றில் ஈடுபட்டால் சேவை என்ற பெயர் இவற்றிற்குப் பொருந்தாது. சில சமயங்களில் சேவைகள் தனி மனிதரால் அல்லது சமூகத்தால் பாராட்டப்படுகின்றன. சன்மானங்களும் வழங்கப்படுகின்றன. அப்படியாயின் அவற்றை ஏற்றுக்கொள்ளு வதில் தவறில்லை. சிறந்த மனிதர் இவற்றைக்கூட ஏற்றுக்கொள்வ தில்லை. ஆனால் சேவைக்காக சன்மானம் அல்லது பாராட்டு வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. "உன் வலது கை செய்வதை இடதுகை அறியாதிருப்பதாக" என்று இயேசுவானவர் சொன்னார். "நீயோ தர்மம் செய்யும்போது அந்தரங்கத்தில் செய்வாயாக. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்" என்றும் சொல்லி யிருக்கிறார். சேவைக்கு பிரதிபலனை எதிர்பார்க்கக் கூடாது என்பதே அவர் கருத்து. சேவையின் ஒரே நோக்கம் கடனைத் திருப்பிக்கொடுத்தல் என்ற உணர்ச்சிதான். "பணி செய்து கிடப்பதே என் கடன்". வேறு விதமாய்ச் சொல்லப்போனால் அது அன்பின் கடன் என்னலாம். கடவுள் மனிதனிடத்தில் மட்டற்ற அன்பு செலுத்தியிருக்கிறார். அந்த அன்புக்கு ஈடாக அவன் அன்பு செலுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஆனால் அவன் எவ்வளவு அன்புகூர்ந்தாலும் கடவுளின் அன்புக்கு ஈடாகாது. ஆகவே அந்த அன்பை தன் பிறன்மேல் செலுத்தும் படி கடவுள் விரும்புகிறார். கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் காணாத தேவனிடத்தில் அன்புகூரமுடியாது. சகோ தரர்களிடத்தில் அன்புகூருவது வாயினால் அல்லது உணர்ச்சி யினால் நடத்தப்படும் ஒரு காரியம் அல்ல. அது ஒரு செயல். அன்பு செயலில் வெளிப்படவேண்டும். சகோதரனுக்கு உண்டான

குறைவில் அவனுக்கு உதவி செய்வதே அன்பு. இதை பரிசுத்த யாக்கோபும் பரிசுத்த யோவானும் தங்கள் நிருபங்களில் நன்கு விளக்கி வற்புறுத்தி உள்ளனர். ஆகவே தெய்வ அன்பினால் நெருக்கி ஏவப்பட்ட மனிதன் உடன் மனிதரிடத்தில் செயலின் மூலமாய் அன்புகூர்ந்து அன்புக்கடனை நிறைவேற்றுகிறான். இதுதான் கிறிஸ்தவ சேவையின் அடிப்படை. பரி. மத்தேயு 25–ம் அதிகாரம் கடைசியில் சொல்லப்பட்டுள்ள பெரிய உவமை இதை நன்கு விளக்கும். இந்த நோக்கத்தையே கொண்டு கிறிஸ்தவர்கள் சேவையில் ஈடுபட வேண்டும்.

ஆதித் திருச்சபையிலேயே கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட தரும காரியங்களில் ஈடுபட்டனர். பிணியாளிகளைச் சந்திப்பதிலும், விதவைகளைப் பராமரிப்பதிலும், பஞ்சத்தில் அகப்பட்ட சகோதரருக்கு தர்மப் பணம் அனுப்புவதிலும், இருளிலுள்ளவர்களுக்கு சுவிசேஷ ஒளியைச் சுமந்து செல்வதிலும் அவர்கள் ஊக்கம் காட்டினார்கள். எவ்வித பலனையும் எதிர்பாராமல் கிறிஸ்துவின் அன்பினாலேயே செய்தார்கள். பின் கிறிஸ்தவர்கள் பற்பல சேவை சங்கங்களை நிறுவினார்கள். திருச்சபை வரலாற்றில் செயலில் சுவிசேஷம் (Gospel in Action) என்பதுதான் மூக்கிய பொருள். சமூக சீர்திருத்தங்களிலும் கிறிஸ்தவர்கள் முன்னணியில் நின்று சேவை புரிந்து வந்திருக்கிறார்கள், நாடெங்கும் கல்வியைப் புகுத்தி மக்களை அறிவீனம் என்னும் இருளிலிருந்து அறிவு என்னும் ஒளிக்குள் நடத்தி யுள்ளனர். குற்றவாளிகளைத் தண்டிக்கும் கொடூர முறைகளை மாற்றி அமைக்க உதவி யுள்ளனர். சிறைச்சாலைகளில் உள்ள மக்களின் வாழ்க்கையின் கசப்பைக் குறைத்து அவர்கள் மக்களாகவே வாழ வழி வகுத்துள்ளனர். அடிமை வாணிபத்தை அடியோடு ஒழித்துக் கட்டினதில் கிறிஸ்தவர்கள் சேவைதான் அதிகம். வைத்திய நிலயங்கள் கட்டுவதில் அதிக அக்கரை எடுத்துக்கொண்டார்கள், அது தெய்வப்பணி என்றதால். எவரும் தீண்ட அஞ்சின, சமூகத்தால் தள்ளி வைக்கப்பட்ட குட்டரோகிகளுக்கு உதவிசெய்ய ஏற்பாடுகள் செய்தனர். அனாதைச்சாலைகள், கைத்தொழில் சாலைகள், ஒடுக்கப்பட்டோரையும் விதவைகளையும் ஆதரிக்கும் மடங்கள் நிறுவப்பட்டன. இவை எல்லாவற்றையும் ஆதிக் கிறிஸ்தவ மக்களே செய்து வந்தனர். இன்னும் பிற்காலத்தில் சேவை சங்கங்கள் பல துவக்கப்பட்டன. செஞ்சிலுவைச் சங்கம், அகில உலக சமாதானச் சங்கம், ரோட்டரி இயக்கம், சாரணர் இயக்கம், கிறிஸ்த வாலிபர் சங்கம், கிறிஸ்தவ மாணவர் இயக்கம், Toc H, சுகாதார இயக்கங்கள், கொடிய தொத்து வியாதிகளை ஒழிக்கும் இயக்கங்கள்

முதலிய பல சேவைக் குழுக்களும் இயக்கங்களும் முதன்முதலில் கிறிஸ்தவர்களால்தான் துவக்கப்பட்டன. இவை எல்லாவற்றையும் தூண்டின சக்தி கிறிஸ்துவின் நெருக்கி ஏவும் அன்பே. கடவுளோடு சம்பந்தப்பட்டு, அவர் காட்சி பெற்று, அவர் அன்பை உணர்ந்து, அவர் அருள் பெற்ற மக்கள் சேவை செய்யாமல் இருக்க முடியாது. "He who neglects love's duties of Service in Christ's name to those who need the ministry of love cannot long enjoy the raptures of worship within the sanctuary" என்று சொல்லியுள்ளார் Dr. J. R. Miller. அதாவது அன்பின் கடனாக சேவை செய்வதை அசட்டை பண்ணுபவன் கடவுளின் காட்சி காணமுடியாது என்பதே.

தற்காலத்தில் கிறிஸ்தவர்களின் சேவையைப் பின்பற்றி மற்றவர்களும் பல சேவை சங்கங்களை நிறுவியுள்ளனர். மொத்தத்தில் இவை உண்மையான சேவை செய்யவில்லை எனலாம். ஏனென்றால் அவற்றின் நோக்கமே தவறானது. போட்டி மனப்பான்மையில் துவக்கப்பட்ட சங்கங்கள் பல. இன்னும் சில அரசியல் கட்சிகளால் ஏற்படுத்தப்பட்டவை. மக்களை தங்கள் வசப்படுத்தி தங்களுக்கென உபயோகிப்பதே அவர்கள் நோக்கம். மேலும் அவற்றில் ஈடுபட்டவர்கள் உண்மையற்றவர்களாக தங்கள் நலனையும் ஆதாயத்தையும் அதிகமாக நாடுவதால் மக்கட்கு சேவையின் பலன் கிட்டாமல் போகிறது. கவரத்தக்க பேச்சுகளும், விளம்பரங்களும், அறிக்கைகளும், புள்ளி விபரங்களுமே இச் சேவாசங்கங்களின் சாதனை கிறிஸ்தவர்கள் மேற்பார்வையில் நல்ல வேலை செய்த சாரண, ரோட்டரி சங்கங்கள்கூட இப்பொழுது மற்றவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு சீர்குலைந்து போய்விட்டன. அவற்றின் தலைமையிலுள்ள மக்கள் உண்மையும் மனச்சாட்சியும் அற்றவர்களாயிருப்பதால் ஏற்பட்டது இந்நிலை. மீண்டும் கிறிஸ்தவர்களின் சேவை ஈண்டு தேவைப்படுகிறது. நம் முன்னோடிகளைப்போல நாமும் கிறிஸ்துவின் அன்பினால் ஏவப்பட்டு இச்சேவை சங்கங்களை இயக்குவிக்க அழைக்கப்படுகிறோம்.

ஒரு மனிதன் தான் மட்டும் நல்ல குடிமைப்பண்புள்ளவனாக வாழ்ந்து அதுபோதும் என்றிருப்பது கூடாது. சமூகத்துக்கு அவன் இன்னும் அதிக பொறுப்புள்ளவன். மற்றவர்கள் சமூக வாழ்க்கைக்கு ஒவ்வாத முறையில் நடந்து கொள்ளும்போது அவர்களைத் திருத்தவேண்டிய பொறுப்பு அவனைச் சார்ந்தது. அவன் தான் பொறுப்புணர்ச்சியுள்ள குடி. கிறிஸ்தவர்கள் யாவரும் இப்படிப்

பட்ட குடிகளா யிருக்கவேண்டும். அப்போஸ்தலன் சொல்லுவது போல "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி", "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து," இப்படியாக கிறிஸ்துவின் அன்பை எடுத்துக் காட்டவேண்டும். சிறப்பாக இந்தியநாட்டில் சமூக உணர்ச்சியும், கட்டுப்பாடும் வெகு குறைவு. சிறு காரியங்களில் கூட மக்கள் உணர்ச்சியற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். தேசியக் கீதம் பாடப்படும்போதும், தேசியக் கொடி ஏற்றப்படும்போதும் நேர்நிலையில் நிற்கவேண்டும் என்ற சாதாரண விதியைக்கூட அறியாதவர்களும் அனுசரியாதவர்களும் வெகு பலர். படித்தவர்களும், அதிகாரிகளுங்கூட அதைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளுவதில்லை. தேசியக்கொடியை கண்டவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும் பறக்கவிட்டு அதற்கு மரியாதைக் குலைச்சல் உண்டுபண்ணுகிறார்கள். பொதுவிடங்களில் அசுத்தம் செய்பவரும் பொதுச் சொத்துகளை அபகரிப்பவர்களும் கண்டிக்கப்படுவதே யில்லை. ஓராண்டில் தென்னிந்திய ரயில்வேயில் மட்டும் திருட்டுப்போன மின்சார சாமான்களின் மதிப்பு ரூ. 9 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. கூட்டமான இடங்களில் வரிசையாக நிற்பது (Queue) அதிக அபூர்வம். இப்படிப்பட்ட சிறு காரியங்களில் கிறிஸ்தவர்கள் தாங்கள் முன்மாதிரியாய் நடந்துகொள்வதோடு மற்றவர்களையும் நல்வழிப்படுத்தவேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு.

எல்லாவற்றிற்கும் மேலாக சமூக வாழ்க்கையின் அடிப்படையாகிய உண்மை கிறிஸ்தவர்களிடம் சிறப்பாகக் காணப்படவேண்டும். அதை வற்புறுத்தி ஏனைய மக்களிடம் அப்பண்பைப் புகுத்தவேண்டும். பிறநாடுகள் சிலவற்றில் இப்பண்பு நன்கு வளர்ந்திருக்கிறது. ஆங்கிலேய மக்கட்குள் நாணயம் அதிகம். ஐப்பானில் திடீரென மழை வருவதால் ஒவ்வொரு ரயில் நிலயத்திலும் ஆறு குடைகள் இருக்கும். மக்கள் எடுத்து உபயோகிக்கலாம். ஆனால் ஒரு குடையும் குறைந்து போவதில்லை. எவரும் தம் பொருளை தொலைத்துப்போட்டால் கவலைப்படவேண்டியதில்லை. ஏனென்றால் கண்டெடுத்தவர்கள் அதைக் கண்டிப்பாய்த் திருப்பிக்கொடுத்துவிடுகின்றனர். இப்படிப்பட்ட நிலை இந்திய நாட்டிலும் உண்டாகவேண்டும். இதற்கு ஆவனசெய்து தங்கள் முன்மாதிரியாலும் சேவையாலும் பாடுபடவேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை.

"பொய்யைக் களைந்து அவனவன்
பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்"
(எபே. 4 : 25).

அத்தியாயம் 12

முடிவு

இதுவரையும் சொல்லப்பட்டவைகளிலிருந்து ஒன்று தெளிவு படுகிறது. அதாவது தனி மனிதனின் வாழ்க்கை நோக்குகளுக்கும் சமுதாயம் அவனிடம் எதிர்பார்க்கும் கடமைகளுக்கும் ஒரு போராட்டம் உண்டு என்பதே. தன்னடக்கம் பெற்ற மனிதர் இப்போராட்டத்தில் வெற்றி பெற்றவர்கள். இவர்கள் வெகு சிலரே. குறுகிய வாசலைத் தெரிந்து கொண்டவர்கள். ஆனால் பெரும்பாலான மக்கள் தன்னடக்கமற்றவர்கள். இவர்கள் விசாலமான வழியைத் தெரிந்துகொண்டவர்கள். இப்படிப்பட்டவர்களுக்கு சட்டங்களும் கட்டுப்பாடுகளும் தண்டனைகளும் உண்டு. என்றாலும் அவை மனிதரால் உண்டானவைதானே. மனிதன் அவற்றை எளிதில் மீறி தப்பிவிடுகிறான். அப்படியானால் கடவுளால் அளிக்கப்பட்ட அன்பின் கட்டளை மட்டுமே மக்களை நன்னெறியினின்று வழுவாமல் காக்கக்கூடியது. எல்லா சற்குணங்களையும் உருவாக்கக்கூடியது அன்பே. ஆகையால்தான் அப்போஸ்தலன் இதை "பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பு" என்று குறிப்பிடுகிறார். மேலும் சட்டங்களுக்கு "கோபாக்கினையின் நிமித்தம் மட்டுமல்ல மனச்சாட்சியின் நிமித்தமும் கீழ்படிய வேண்டும்" என்கிறார். ரோமர் 12ம் 13ம் அதிகாரங்களில் கிறிஸ்தவர்கள் சமூகத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைத் தெளிவாய் விளக்குகிறார். எனவே இக்காலத்துக் கிறிஸ்தவர்கள் சமூக வாழ்க்கையில் தங்கள் பொறுப்பை உணர்ந்து அதைச் செவ்வனே நிறைவேற்ற ஆண்டவர் அருள்புரிவாராக.

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — N. 89 — C. 1250

15	22
16	23
17	24
18	25